வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 365 | பக்கங்கள் : 20






**08** இந்தியாவுடன் பாதுகாப்பு அதிகரிக்க திட்டமிடுகிறதா தென் இலங்கை?



**09** பூமிக்கு அருகே வரும் நிரெஸ் விண்கல்! பாதிப்பு ஏற்படுமா?



**10** அப்பிள் தொலைக்காட்சியில் வெளிவந்த 'டெட் லாசோ' தொடர் சொல்லும் கதை...



**13** நிரபராதிகளென விடுதலையாவது நீதியானதா?

# ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை யாழில் நேற்று ஆரம்பித்த சம்பிக்க!

## பொதுவேட்பாளராக அவரை களமிறக்க எதிரணிகள் வியூகம்



கொழும்பு, டிச. 05

வடக்குக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார் என அறிய முடிந்தது. 19

## தடைப்பட்டுள்ள அபிவிருத்திகளை குடாநாட்டில் தொடரவேண்டும் அரசு

### யாழ். வந்த சம்பிக்க ரணவக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்.மாவட்டத்தில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று சனிக்கிழமை விஜயம் செய்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற 19

## இலங்கையில் அரசியல் தீர்வுக்கு அமெரிக்க அழுத்தம் மிகஅவசியம்

### இராஜாங்க செயலரிடம் அந்நாட்டு வெளிவிவகாரக் குழு பிரதிநிதிகள் வலியுறுத்து



வொஷிங்டன், டிசெம்பர் 05

இலங்கையில் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தி அமெரிக்க வெளிவிவகாரக் குழுவின் பிரதிநிதிகள் கிரிகோரி டபிள்யூ. மீக்ஸ் மற்றும் மைக்கல் மெக்கால் ஆகியோர் அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்ரனி பிளிங்கனுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். 19

## அரசுக்கு எதிராக சபையில் எதிரணியினர் வெளிநடப்பு

கொழும்பு, டிச. 05

எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தாக்க முற் 19

## மீண்டும் முடக்கம் ஆராய்கிறது அரசு!

கொழும்பு, டிசெ. 05

பண்டிகைக் காலங்களில் மக்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்ளலாம் என்பதால், இம்மாத நடுப்பகுதியில் இரண்டு வார 19

## அமெரிக்கா, இந்தியாவுக்கு செல்வதால் தீர்வு வருமா?

### கூட்டமைப்பிடம் அரசு கேள்விக்கணை

கொழும்பு, டிச. 05

"தேசிய இனப்பிரச்னைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்பதே எமது அரசின் திட்டம். அதைவிடுத்து 19

## கூட்டமைப்பை டில்லிக்கு அழைக்கிறது மோடி அரசு

கொழும்பு, டிசெ. 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவினர் அடுத்த வாரம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தால் இது தொடர்பில் கூட்டமைப்புக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 19




# பாகிஸ்தானில் இலங்கையர் படுகொலை: பாராளுமன்றில் வன்மையான கண்டனம்!

கொழும்பு, டிசெ. 05

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் மிகவும் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தை இலங்கை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுத்த சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன,



"பாகிஸ்தானில் உள்ள தொழிற்சாலையில் முகாமையாளராகப் பணிபுரிந்த பட்டதாரியான இலங்கையர் ஒருவர் (பிரியந்தகுமார), அடிப்படைவாதிகளால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, நீதியை வழங்குவதற்கு பாகிஸ்தான் பிரதமர் தலையிட்டுள்ளார். இதனை நாம் மதிக்கின்றோம்" - என்றார். (இ)

# இலங்கையில் இரசாயன உரத்தை மார்ச் மாதமே விநியோகிக்க முடியும்

கொழும்பு, டிசெ. 05

இரசாயன உர இறக்குமதிக்கு அரசு மீள அனுமதி வழங்கியுள்ள நிலையில், இறக்குமதிக்கான முதற்கட்டப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று உர இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களுடன், அதற்கான உடன்படிக்கையைச் கைச்சாத்திடுவதற்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் சுஜீவ வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், உர இறக்குமதிக்கான வழமையான நடவடிக்கைகளின் பிரகாரம், இலங்கைக்கு உரம் கிடைப்பதற்கு மூன்று மாத காலமாகும்.

இதற்கமைய, எதிர்வரும் மார்ச் மாதமளவில் விவசாயிகளுக்கு இரசாயன உரத்தை விநியோகிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் உர இறக்கும தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களில் 31 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றவர்களே!

கொழும்பு, டிசெ. 05

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களில் 69 சதவீதமானவர்கள் எந்தவொரு கொரோனா தடுப்பூசியையும் பெறாதவர்கள் என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும், ஏனைய 31 சதவீதமானவர்கள் ஒன்று மற்றும் இரண்டு கொரோனா தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா மரணங்களில் 77 சதவீதமானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என தெரிவித்த அவர், 30 வயதுக்கு குறைவானவர்களின் மரண சதவீதம் 1.2ஆக பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களில் 81 வீதமானவர்கள் வேறு பல நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# விபத்தில் குடும்பஸ்தர் உடல் கருகி உயிரிழப்பு



கொழும்பு, டிசெ. 05

ஆனமடுவ - சிலாபம் வீதியில் சங்கட்டிக்குளம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி தீப்பிடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார் என்றும், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்றும் ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனமடுவ, முதலக்குளிய பகுதியைச் சேர்ந்த 60 வயதான ராஜகருணா ஹேரத் முதியன் சேலாகே ரன்பண்டார என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

வன்னி ரஸ்நாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே விபத்தில் படுகாயமடைந்து புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிலாபத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிள், அந்த வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் சம்பவ இடத்திலேயே தீப்பற்றி எரிந்தது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த குடும்பஸ்தர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார். (இ)

# பஸ்ஸை சாரதியுடன் கடத்திய 6 பேர் கைது

கொழும்பு, டிசெ. 05

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸை சாரதியுடன் கடத்திச் சென்ற அறுவரை கல்ஓயா பொலிஸார் கைதுசெய்து ஹொரவப்பொத்தான பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அநுராதபுரம், ஹொரவப்பொத்தான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளுத்ஓயா பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிங்கிரிய மற்றும் வீரபுகெதர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 37, 39, 41, 42, 48 மற்றும் 50 வயதுகளையுடைய அறுவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வானொன்றில் வந்த குறித்த குழுவினர் குறித்த பஸ்ஸை சாரதியுடன் கடத்திச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், கல்லோயா பொலிஸாரின் உதவியுடன் பஸ்ஸைக் கைப்பற்றியுள்ளதுடன், கடத்தல்காரர்களையும் கைதுசெய்துள்ளனர். (இ)

## கல்வி tv CHANNEL-1

### 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

### 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
05.12.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## தமிழ் வெளிவிவகார கொள்கை?

தமிழர்கள் அரசியல் அதிகம் சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் - எங்களுக்கானதொரு வெளிவிவகாரக் கொள்கை அவசியம் - அந்த கொள்கையின் அடிப்படையில்தான் தமிழ் தேசிய அரசியல் தரப்புக்கள் விடயங்களை கையாள வேண்டும். இப்படியொனதொரு அபிப்பிராயத்தை அவ்வப்போது காண முடிகின்றது. சில தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் இவ்வாறான கருத்தை முன்வைத்து வருகின்றனர்.

ஈழத் தமிழர் அரசியல் சர்வதேச மயப்படுத்தப்படுத்த பின்புலத்தை - நாம் இரண்டு கட்டங்களாக நோக்கலாம். ஒன்று இந்திய- இலங்கை ஒப்பந்த காலகட்டம். அடுத்தது, நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழ் இடம்பெற்ற மேற்குலகின் சமாதான முன்னெடுப்பு. இந்திய -இலங்கை ஒப்பந்தமானது, இலங்கையின் உள் பிரச்சினைக்கு பிராந்தியரீதியான அரசியல் முக்கியத்துவத்தை வழங்கியது. இந்தியாவின் நேரடியான தலையீடு - தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்தமை - அதனைத் தொடர்ந்து அமைதிப் படையை இலங்கையில் நிலைகொள்ளச் செய்தமை - ஆகிய விடயங்களால், இலங்கையின் உள்நாட்டு பிரச்சினை முதல் முதலாக சர்வதேச அரங்கிற்குள் சென்றது. இந்திய படைகளின் வெளியேற்றத்தை தொடர்ந்து இந்தியாவின் நேரடியான தலையீடு முடிவுக்கு வந்தது.

2002 இல் நேர்வேயின் தலைமையில் இடம்பெற்ற சமாதான முன்னெடுப்புக்கள் தமிழர் அரசியலை மேற்குமயப்படுத்தியது. இதிலுள்ள அடிப்படையான ஒரு விடயத்தை தமிழ் தரப்புக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர் பிரச்சினை ஒரு மனித உரிமைசார்ந்த பிரச்சினையாக மேற்குலகில் விவாதிக்கப்பட்ட அதே வேளை, தமிழரின் ஆயுத விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்குலக நாடுகளில் சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பட்டியிலிடப்பட்டது. அதாவது ஒரு புறம் ஆயுத விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய அமைப்பை பயங்கரவாத அமைப்பாக மேற்குல மயப்படுத்தப்பட்டிருக்கின்ற பின்புலத்தில் - அந்த ஆயுத விடுதலைப் போராட்டம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களின் பிரச்னைகள் மனித உரிமை பிரச்சினைகளாக முதன்மைப் படுத்தப்பட்டது.

யுத்தம் முடிவுற்று - விடுதலைப் புலிகள் வீழ்ச்சியுற்று - 12 வருடங்கள் சென்றுவிட்டது. ஆனால் இப்போதும் மேற்குலக தாராளவாத நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான பயங்கரவாத முத்திரையை நீக்கவில்லை. இந்த நாடுகளே மறுபுறம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களின் மனித உரிமைசார்ந்த விவகாரத்தை கையிலெடுத்திருக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில்தான் எங்களுக்கானதொரு வெளிவிவகாரக் கொள்கை பற்றி சிந்திக்க வேண்டுமென்று சில குரல்கள் அவ்வப்போது மின்னி மறைகின்றன. ஆனால் இந்த விடயம் பேசப்படுவது போன்று இலகுவான ஒன்றல்ல. எனவே, வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் பேசுவதற்கு முன்னர், முதலில் அது தொடர்பில் தமிழ் கட்சிகள் மத்தியில் காய்த்தல் உவத்தலற்ற உள்ளக உரையாடல்கள் இடம்பெற வேண்டும்.

கடந்த கால அணுகுமுறைகள் தொடர்பில் விமர்சன பூர்வமான பார்வைகள் அவசியம். அதே வேளை - பிராந்திய அரசியல் நிலைமைகள் தொடர்பிலும், உலக அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் காணப்படும் புதிய போக்குகள் தொடர்பில் ஆழமான தேடல்கள் அவசியம். பிராந்திய அரசியல் என்பது இந்தியாவை மையப்படுத்திய ஒன்றாகும். உலகளாவிய அரசியல் என்பது அமெரிக்காவை மையப்படுத்தியது. இதற்கு இடையிலிருப்பதுதான் எழுச்சியடைந்துவரும் சீனா தொடர்பான விவகாரமாகும்.

இடையிலிருக்கும் சீனா தொடர்பில் கூட்டமைப்பு தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்துவருகின்றது. அதாவது, சீனாவின் பிரசன்னத்தை, வடக்கு கிழக்கில் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். எதிர்ப்போம். சுமந்திரன் இதனை வெளிப்படையாகவே கூறிவருகின்றார். அதே வேளை, அமெரிக்க-இந்திய கூட்டின் மூலம் அரசியல் தீர்விற்கான அழுத்தங்களை தாம் எதிர்பார்ப்பதாகவும், சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இடையிலிருக்கும் சீனாவிற்கு எதிர்ப்பு அதே வேளை அமெரிக்க - இந்திய கூட்டிற்கு ஆதரவு. இதன் மூலம் கூட்டமைப்பின் நிலைப்பாடு தெளிவாகின்றது. அமெரிக்க இந்திய நலனோடு இணைந்திருப்பதுதான் ஈழத் தமிழர்களுக்கு உகந்தது. அதுதான் இன்றைய சூழலுக்கு சரியானது. இதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடு. கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடோடு வெளியிலிருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகள் உடன்பட்டால் தமிழர்களுக்கான ஒரு தெளிவான வெளிவிவகார அணுகுமுறையை கண்டடைவது சுலபமானது.

# வீடுகளுக்குள் குண்டுகள்!

அகில்

வீடுகளுக்குள் தொடரும் வெடிப்புக்கள் தான் இலங்கையின் இந்த வார பரபரப்பு!

கடந்த இரண்டு வாரங்களில் 50க்கும் அதிகமான சமையல் எரிவாயு சிலிண்டர் அல்லது, குக்கர்கள் வெடித்துச் சிதறியிருக்கின்றன. வீடுகளிலும், உணவகங்களிலும் இடம்பெற்ற இந்த வெடிப்புக்கள் பாராளுமன்றத்திலும் எதிரொலித்திருக்கின்றன.

எதிர்க் கட்சிகளின் அழுத்தத்தை சமாளிக்க வழமைபோல, இது தொடர்பில் ஆராய்வதற்காக குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. புதன்கிழமை கூடிய இந்தக் குழுவின் கூட்டம் முடிவின்றி முடிவடைந்திருக்கின்றது. அதேவேளையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எவ்வளவு காலத்துக்கு என்பது தெரியவில்லை.

யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, அம்பாறை, ஹட்டன், புத்தளம் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இவ்வாறான வெடிப்பு சம்பவங்கள் நாளாந்தம் பதிவாகி வருகின்றது. உயிரிழப்புக்கள் இல்யென்றாலும், அவை சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

நவம்பர் மாதம் 4ம் தேதி வெலிகம பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் முதலாவது எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவம் பதிவாகியது. அதன்பின் தொடர்ச்சியாக இவ்வாறான வெடிப்பு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

தொடரும் இச்சம்பவங்களுக்கு காரணம் உத்தியோகபூர்வமாக இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை. இதனால், மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அச்சத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவும் இல்லை.

பாராளுமன்றத்தில் எதிரணி கிளப்பிய பிரச்சினையையடுத்து, ”2015ம் ஆண்டு முதல் இதுவரையான காலம் வரை இலங்கையில் எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவங்கள் 233 பதிவாகியுள்ளதாக நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்திருந்தார். இது வழமையான ஒரு சம்பவம் எனக் காட்டிக் கொள்வதற்கான ஒரு உபாயமாகனத்தான் இந்தத் தகவலை அவர் பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இருந்த போதிலும் கடந்த வாரங்களில் எரிவாயு தொடர்பிலான வெடிப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளதையும், இராஜாங்க அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இது தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தப் பிரச்னையை எதிர்க்கட்சிகள் கைகளில் எடுத்ததையடுத்து, நிலைமைகளை எதிர்கொள்வதற்காகவே விஷேட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. புதன்கிழமை நடைபெற்ற இந்தக் குழுவின் அவசர கூட்டத்தில் தரமரற்ற வகையில் ஆபத்தான சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதால் அவற்றை திரும்பப்பெறுமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியிருந்தன. இருந்த போதிலும், அரசாங்கத் தரப்பு அதனை ஏற்க மறுத்தமையால், கூட்டம் முடிவின்றி முடிவடைந்தது.

சமையல் எரிவாயு சிலிண்டருக்குள் உள்வாங்கப்படும் பியுட்டேன் மற்றும் புரோபீன் ஆகிய இரண்டு ரசாயண பொருள்களின் செறிவுகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளமையே, இந்த வெடிப்பு சம்பவங்கள் நேர்வதற்கான காரணம் என எதிர்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார, இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதுடன், பெட்ரோலிய கூட்டுதாபனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் ஊடாக, இந்த விடயம் வெளிவந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். பியுட்டேன் மற்றும் புரோபீன் ஆகிய இரண்டு இரசாயண பொருள்களின் செறிவானது, 49க்கு 51 என்ற அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறிய அவர், பெற்றோலிய கூட்டுதாபனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கையை வெளியிடுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.


பெற்றோலிய கூட்டுதாபனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கை, நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உதய கம்மன்பில கூறியிருந்தார். ஆனால், குற்றச்சாட்டுக்கு அவர் நேரடியாக பதிலளிக்கவில்லை.

சிலின்டர் வெடிப்புக்கு அரச தரப்பில் வேறு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் கூட, அடுத்தடுத்து இரண்டு வாரங்களுக்குள் இவ்வாறான சம்பவங்கள் பல பதிவாகியிருப்பது அரச தரப்பில் சொல்லப்படும் காரணங்களை பலவீனப்படுத்துகின்றது.

இதேவேளையில், சிலிண்டர் மற்றும் குக்கர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக பொலிஸாரும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கான விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மொறட்டுவை பல்கலைக்கழக அறிக்கை கிடைக்கப் பெற்றவுடனேயே, முடிவொன்றுக்கு வர முடியும் என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

வழமைபோல உண்மையான காரணம் வெளிவருமா, காரணமானவர்கள் கண்டு பிடிக்கப்படுவார்களா என்பவைதான் மக்கள் மத்தியில் எழும் கேள்விகளாக உள்ளன.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’





# இந்தவார ராசிபலன்
## 05.12.2021 – 11.12.2021

டிசெம்பர். 05 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை 19

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | துவிதியை |

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

வருமானம் அதிகரிக்கும். லட்சியத்தில் வெற்றிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு கிட்டும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. சந்தித்தவர்களால் சந்தோஷம் கிட்டும். வருமானம் எதிர்பார்த்தபடியே அமையும். வருங்காலக் கனவுகளை நனவாக்க பயணமொன்றை மேற்கொள்வீர்கள். பேச்சிலும் செயலிலும் கவனம் தேவை. விரயங்கள் குறையும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பிறர் உதவிகளை நாடிய நிலை மாறும். மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். யோகங்கள் ஏற்பட யோசித்துச் செயல்பட வேண்டும். குடும்ப அமைதி குறையாமலிருக்கும். அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் ஒருவருக்குத் திருமண முயற்சி வெற்றி பெறும். வரவை விட செலவு சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. விரயங்கள் குறையும்.. வீடு மாற்றம் பற்றி யோசிப் பீர்கள். சச்சரவுகள் அகன்று சமாதானமாகும். தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். எதிரிகளிடம் அதிகக் கவனம் தேவை. இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். உடல் நலம் சீராகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

வெளியூர்ப் பயணத்தால் அலைச்சல்கள் அதிகரிக்கலாம். அலுவலகப் பணிகளில் சிறுதடை, தாமதங்கள் வந்து நீங்கும். இடம் பூமியால் லாபம் கிட்டும். எதிர்பார்த்த விஷ யங்களில் லேசான தடைதாமதங்கள் ஏற்படலாம்.பணியிடத்தில் எதிர்பாராத பாராட்டுக் கிடைக்கும். பக்குவமாகப் பேசி நன்மைகளைச் சாதித்துக் கொள்வீர்கள். உற்றார் உற வினர்களின் சந்திப்பு கிட்டும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு வரும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்பு வரலாம். முயற்சிகள் பலிதமாகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

குறை சொல்லியவர்கள் கூட பாராட்டுவார்கள். பிரிந்து சென்ற நண்பர்களும் உறவினரும் பிரியமுடன் வந்திணைவர். மனதில் பணி பற்றி இருந்து வந்த குழப்பங் கள் மாறும். யோகமான வாரம். நினைத்த விஷயத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வரலாம். பணியிடத்தில் சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பீர்கள். அமைதி கூடும். அனுகூலம் உண்டு. கூட்டு முயற்சிக்கு நண்பர் ஒருவர் ஒத்துழைப்பு செய்வார்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எடுத்த முயற்சியில் எளிதில் வெற்றி கிட்டும். தொழில் வளம் கருதி புதிய கூட்டாளி களைச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சி தரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். வர வேண்டிய பணம் இயல்பாய் வசூலாகும். பழைய முதலீட்டால் லாபம் கிட்டும். சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிகாரிகள் அன்பாய் நடந்து கொள்வர். சுப பேச்சுகள் முடிவாகும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பாதியில் நின்ற பணியை முனைந்து முடிப்பீர்கள். பலநாள் விருப்பம் ஒன்று நிறை வேறும். புதிய மனிதர்களிடம் விழிப்புணர்ச்சி தேவை. திடீர் செலவு ஒன்றால் சந்தோஷம் வரும். வாய்ப்பு ஒன்று தேடி வரும். சொந்தங்களால் சிறுசிறு நன்மை உண்டு. நண்பர்களுக்கு விருந்தளித்து மகிழும் வாய்ப்பு கிட்டும். கடன் தொல்லை தீரும். சொந்த பந்தங்களால் துயர் ஒன்று விலகும். நினைத்தது நிறைவேற நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தேக ஆரோக்கியத்தில் சிறு அச்சுறுத்தல்கள் தோன்றி ஓரிரண்டு நாட்களில் மறையும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

மகிழ்ச்சி அதிகரிக்கும். பம்பரம்போல் சுழன்று பணிபுரிவீர்கள். பகையொன்று மனம் மாறி நட்பாகும். அயல்நாட்டிலிருந்து சந்தோஷச்செய்தி வந்து சேரும். புதிய ஆடை, நகை சேர்க்கை ஏற்படும். உற்சாகம் அதிகரித்து, சோர்வு நீங்கும். அலுவலகப் பணிகளில் பாராட்டுக் கிடைக்கும். பணம் மிக நல்ல வழிகளில் செலவாகும். மனதில் மகிழ்ச்சி நிலவும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள்.நின்றுபோயிருந்த விஷ யங்களைத் தொடருவது பற்றிச் சிந்திப்பீர்கள். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

பிரிந்து சென்றவர்களைப் பற்றிக் கவலை வேண்டாம். பொருளாதார நிலை உய ரும். தொழில் ரீதியான பயணங்கள் உண்டு. பொதுவாழ்வில் புகழ் கூடும். பணியிடத் தில் அனுகூலம் உண்டு. புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு சந்தோஷத் தக வல் உண்டு. சமயோசித புத்தியால் நன்மை காண்பீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் சந்தோஷமும் பெருமிதமும் தரும். இடம், பூமியால் லாபம் கூடும். அரசியல் தலைவர் களின் அன்பு கிட்டும். குறிக்கோள் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியுடன் கூடிய பரபரப்பான வாரம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உடன்பிறப்புகள் அன்பு காட்டுவர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியவர் களை விலக்குவீர்கள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணத்தைச் சற்றுத் தள்ளிப் போடலாம். பிறரை விமர்சிப்பதன் மூலம் பிரச்னைகள் ஏற்படாமல் கவனம் தேவை. வீட்டு விவகாரங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. பிடிவாத குணத்தைவிட்டு நன்மை காண்பீர்கள். வெற்றிச் செய்தி ஒன்று தேடி வரும். சிறிய பண வரவு உண்டு.. வெளிவட்டாரத்தொடர்பு விரிவடையும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நிதானத்துடன் செயல்படுவதன் மூலம் நிம்மதியடைவீர்கள். நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இந்த வாரம் சந்தித்து மகிழ்வீர்கள். வருமானம் நிம்மதியளிக்கும். உழைப்புக்கேற்ற பலன் இல்லை என்ற தேவையற்ற உறுத்தலை விலக்குங்கள். பக்கத்தில் இருப்பவர்களை அனுசரித்து நன்மை காண்பீர்கள். வாழ்க்கைத் துணையின் விருப்பம் ஒன்று நிறைவேறும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நினைத்தது நிறைவேறப் பெருமுயற்சி எடுப்பீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

வெளிநாட்டுத் தொடர்பு விஷயமாக அதிகாரிகளின் சந்திப்பு அனுகூலமாக அமையும். எதிர்பார்த்த சுபசெய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். நிதி நிலைமை நன்றாக இருக்கும். சிலருக்கு வயிறு சம்பந்தப்பட்ட பிரச்னை ஏற்படலாம். உணவு மற்றும் தூய்மை விஷயத்தில் எச்சரிக்கை தேவை. எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். உறவினர்களின் வருகையில் வீட்டில் கலகலப்பு உண்டாகும். பணியாளர்கள் தங்களின் உழைப்பால் நன்மை அடைவர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வீட்டை விரிவு செய்து கட்டுவதற்கான அறிகுறிகள் தோன்றும். எதிரிகள் விலகுவர். நண்பர் ஒருவருக்கு உங்களால் நன்மை ஏற்பட்டு நெகிழ்ச்சியடைவார். குழந்தைகள் வாழ்வில் வளர்ச்சி காண்பார்கள். பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை. வேலையாட்களிடம் அன்பாகப் பேசி வேலை வாங்கி வெல்வீர்கள். எதிர்பாலினத்தினரின் ஒத்துழைப்புக் கிட்டும். ஆரோக்கியம் சீராகி சக பணயாளர் ஒருவருக்கு வந்த பிரச்னை அகலும்.செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்வது நல்லது.

பகிர்வு - 6

# வெற்றிப் பகிர்வு

கணபதி சர்வானந்தா

ஒரு விருதின் மதிப்பு அதை வழங்குபவர் யார், அதைப் பெறுபவர் யார் என்ற இரண்டு அம்சங்களில் தங்கியிருக்கின்றது. இரண்டுக்கும் இடையிலான சமன்பாட்டிலேயே ஒரு விருதின் பெறுமதி உயர்கின்றது. இவற்றுக்கிடையே முரண்பாடு காணப் படும் போதே விருது பற்றிய சர்ச்சைகள் எழுகின்றன. ‘விருதுகளால் ஒரு படைப்பாளியின் மதிப்பு உயர்வதில்லை, பதிலாக விருது பெறும் ஆளுமைகளைப் பொறுத்தே ஒரு விருது மதிப்புப் பெறுகிறது’ எனச் சில ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் எம். ஏ. நுஃமான் எழுதியதாக ஒரு பதிவினைப் படித்தேன்.

ஒரு சாதாரண மனிதனின் வெற்றியைக் கொண்டாடுவதை விட ஒரு நிறுவனத்தின் வெற்றியைக் கொண்டாடிக் களிப்பதிலேயே அதிக சிறப்பு உண்டு. ஏனெனில் நிறுவனம் என்பது பலர் பால் பட்டது. அதன் வெற்றியிலே ஒரு கூட்டு முயற்சியும் கூட்டுப் பங்கும் சேர அமைந்திருக்கும்.அது மட்டுமல் லாது அந்த நிறுவனத்தை மேலும் வளர்ப்பதாகவும் அவ் வெற்றி காணப்படும்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு மாவட்டத்திலே நடைபெற்றதொரு அரச விருது வழங்கல் விழாவிலே சமூகத்தின் பொறுப்பைத் தாம் சுமந்து செல்லுகின்ற எமது சமூக நிறுவனங்கள் இரண்டுக்கு விருதுகள் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இரண்டு நிறுவனங்களும் யாழ்.மாவட்டத்தில் இயங்குபவை. ஒன்று கல்வி நிறுவனம். மற்றையது தொழில் சார் நிறுவனம்.

கல்வி நிறுவனமான கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்கே அந்தத் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது. அப்பாடசாலையானது கடந்த– 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாகத் தனது பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் அப் பாட சாலையை ஆரம்பிக்கின்ற போது கடவுள் நம்பிக்கையுடன் தான் ஆரம்பித்தோம். தற்போது அகில இலங்கை ரீதியிலுள்ள மாற்று வலுவுள்ள நிறுவனங்களில் எங்கள் பாடசாலை முதலாவது இடத்தைப் பெற்று வெற்றி வாகை சூடியிருப்பது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. அதுவும் கொரோனா நோய்ச் சூழலில் எல்லோரும் மனம் குழம்பிய நிலையில் இருக்கையில், இத்தகைய வெற்றிச் செய்தியானது எங்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது என சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார் என்ற பதிவு ஒன்றினைக் கண்டேன்.

சிவபூமிப் பள்ளி மாணவர்கள் சர்வதேச அளவில் மூன்று முறை சிறப்பு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றனர். முதலில் கிரீஸ் நாட்டில் நடைபெற்ற போட்டியிலும் இரண்டாவது தடவையாக ஆஸ்திரேலி யாவிலும் மூன்றாவது முறையாக அமெரிக்காவிலும் பற்கேற்றனர். சிவ பூமி அறக்கட்டளை இதுபோன்ற மூன்று பள்ளிகளை இலங்கையில் நடத்திவருகிறது. ஒன்று யாழ்ப்பாணத்திலும் மற்றையது கிளிநொச்சியிலும் மூன்றாவது பாடசாலை திருகோணமலையிலும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள சிவபூமி விசேட தேவையுடைய குழந்தைகளுக்கான பாடசாலையானது இலங்கையின் சிறந்த பாடசாலையாக இலங்கை அரசாங்கத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டே சுவாபிமானி 2020 தேசிய விருது விழாவில் அவ்விருது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்துக்கும் அவ் விருது வழங்கப்பட்டிருக்கிறது. சமூக சேவைகள் திணைக்களத்தினூடாகச் செயலாக்கப்படும் சுவசக்தி அமைப்புக்களை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கவீனமுற்ற நபர்களினைத் தொழிலில் ஈடுபடுத்துவதற்குப் பங்களிப்பினை வழங்கிய சிறந்த தொழிலதிபர் அல்லது நிறுவனத்தினைத் தெரிவு செய்யும் போட்டி நிகழ்வின் கீழ் ஊழியர் களின் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைவான நிறுவனங்களைத் தெரிவு செய்யும் மதிப்பீட்டுப் பிரிவினால் கருவி நிறுவனத்துக்கு இவ் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

2009 இல் மௌனிக்கப்பட்ட யுத்தத்துக்குப் பின்பு ஏற்பட்ட சமூகப் பிறழ்வுகளினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு வாழ்வாதாரத் தைக் கொடுப்பது அல்லது அவர்களை வளப்படுத்துவது அல்லது அவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவது என்ற அடிப்படையி லேயே கருவின் செயற்பாடு 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. சாதாரணமாகப் பாதிக்கப்பட்டவர்களை ஏற்றெடுத்துத் தமது பொறுப்பில் உள்ள இல்லங்களில் வைத்துப் பராமரிக்கின்ற நிலையை மாற்றி அவர்களை அவர்கள் சார்ந்த குடும்பங்களிலேயே வைத்துப் பராமரிப்பது, அவர்களுக்குரிய வளப்படுத்தலை மேற்கொள்வது என்ற வகையில் கருவியின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அங்கே சேவை வழங்குனர்கள் என்ற அடிப்படையிலேயே தொழில்சார் பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதோடு மாற்றுத் திறனாளி களை அவர்கள் உறவுகளோடு வைத்திருப்பது தொடர்பில் சமுகத்துக்கு உண்டான பொறுப்பை உணர்த்துவதோடு அதனைத் தக்க வைத்துக் கொள்ள லாம் என்றும் தீர்மானிக்கப்பட்டே கருவி தனது பணிகளைத் தொடர்ந்தாகச் சொல்லப்படுகிறது.

கருவி நிறுவனம் தற்போது மூன்று வெவ்வேறு இடங்களிலே தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. தலைமையகம் ஒரு இடத்திலும், உற்பத்தி அலகு இன்னும் ஒரு இடத்திலும் “சூழல் நேயராவோம்” – சூழலை மாசுபடுத்துவதைத் தடுப்பது அல்லது குறைப்பது என்றவகையில் கழிவுகளை மீள் சுழற்சி செய்வதென்ற முன்றாவது அலகை இன்னும் ஒரு இடத்திலும் வைத்தே கருவி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவ் அனைத்தையும் ஒரு கூரையின் கீழ் செயற்படுத்துவது தொடர்பான முயற்சியில் கணிசமான முற்னேற்றத்தைக் கண்டிருக்கும் கருவி நிறுவனமானது விரைவில் அதற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கவிருக்கிறது. அது மட்டுமல்லாது 2022 இன் தொடக்கத்தில் தெல்லிப்பழையில் அமைந்துள்ள அவர்களுக்குச் சொந்தமான காணியில் இயற்கை விவசாய முயற்சிகளையும் அது தொடர்பான மாதிரிப் பண்ணையையும் கருவி அமைக்கவிருக்கின்றது.

மேற்படி விருதுகள் தொடர்பில் கடந்த 25 நவம்பர் 2021 அன்று பத்தரமுல்ல, பலவத்தை, அப்பே கம வளாகத்தில் நடைபெற்ற விருது விழா விலே சிவபூமி அறக்கடை சார்பில் கலாநிதி ஆறு திருமுருகன் அந்த விருதி னைப் பெற்றுக் கொண்டார். கருவி நிறுவனத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு.து.யசிந்தன் மற்றும் பொருளாளர் திரு.கொன் கிளேடியஸ் ஆகியோர் இணைந்து தமக்குரிய விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவற்றைத் தனிப்பட்ட நிறுவனங்களின் வெற்றி என்று சொல்வதைவிட ஒரு சமுகத்தின் வெற்றி என்று சொல்லிப் பெருமைப்படுவதே பொருத்தமானது.

# நுரைச்சோலை அனல் மின்நிலையம் சீராகும்வரை 1 மணி நேர மின்வெட்டு

## இலங்கை மின்சார சபை அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 05

**நுரைச்சோலை அனல் மின் நிலையம் முழுவதுமாக செயற்பாட்டுக்கு வரும் வரை நாட்டின் சில பகுதிகளில் ஒரு மணித்தியால மின்வெட்டு ஏற்படலாம் என மின்சார சபை தெரிவித்துள்ளது.**

அதன்படி, மாலை 6 மணி முதல் இரவு 9 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு மணித்தியால மின்வெட்டு ஏற்படக்கூடும் என அந்த சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, தடைப்பட்டிருந்த மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் விநியோகம் முழுவதுமாக வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் பிரதான மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் மின்சாரம் தடைப்பட்டது.

எவ்வாறாயினும், சுமார் 6 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மின் விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அமைப்பில் ஏற்பட்ட சமநிலையின்மை காரணமாக நேற்றுமுன்தினம் இரவு வரை நாட்டின் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

எவ்வாறாயினும், நேற்று முன் தினம் நள்ளிரவுக்குள் மின்சார விநியோகம் முழுமையாக வழமைக்குத் திரும்பியதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

அனைத்து துணை மின் நிலையங்களும் தற்போது மின் விநியோகத்தில் இருந்தாலும், நுரைச்சோலை அனல் மின் நிலையம் இன்னும் செயல்படாமல் உள்ளது.

நேற்றுக் காலை நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து தேசிய மின் அமைப்பிற்கு 300 மெகாவோட் மின்சாரத்தை சேர்க்க எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

மீதமுள்ள 600 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் அமைப்புடன் சேர்க்க இன்னும் மூன்று நாட்கள் ஆகும் என மின்சார சபை கூறியது.

இதற்கிடையே நேற்று முன் தினம் தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் குடிதண்ணீர் விநியோகமும் தடைபட்டது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் நள்ளிரவுக்குள் நீர் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (அ)

## கடுமையான சுகாதார நடைமுறையுடன் மன்னாரில் பண்டிகைக்கால வியாபாரம்

மன்னார், டிசெ. 05

மன்னார் மாவட்ட மக்களின் நலனை கருத்திற்கொண்டும் மக்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கடைத் தொகுதிகளுடன் கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ் வருடம் நத்தார் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் முன்னெடுக்க மன்னார் நகர சபையால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நகர சபை வருமானத்தை ஈட்டும் நடவடிக்கையாக இதனை முன்னெடுக்கவில்லை. மக்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 வருடங்களாக கொரோனா தொற்று காரணமாக மன்னார் நகர சபையினால் மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எனினும் குறித்த காலப்பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டது. நாங்கள் மக்களுக்கு பல வழிகளிலும் அறிவுறுத்தல்கள் வழங்கியபோதும் மக்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

பஜார் பகுதி உள்ளடங்கலாக மக்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டது. ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் அதிகூடிய மக்களே கூடி நின்றமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதனால் கொரோனா தொற்று அதிகரிக்கும் சந்தர்ப்பம் இருந்தது. குறித்த விடயங்களை அவதானித்த நிலையில், இவ்வருடம் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடைத் தொகுதிகளை வழங்குவதன் ஊடாக மக்களின் நெரிசலை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்த்துள்ளோம்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்த ஏதுவாக இருக்கும் என்பதற்காக மன்னார் நகர சபை குறித்த தீர்மானத்தை நிறைவேற்றியது-என்றார். (அ)





# யாழ்.வந்த சம்பிக்க ரணவக்க பல பகுதிகளுக்கும் பயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 05

வடக்குக்கு வருகை தந்த முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கும் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

நேற்று காலை 9 மணி அளவில் யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதிக்கு விஜயம் செய்த அவர், அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியதுடன் தனது 43 ஆவது படையணி தொடர்பான துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தார். ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகிய பின்னர் சம் பிக்க ரணவக்க புத்திஜீவிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அமைப்பே 43 படையணி ஆகும்.

அத்துடன் தான் அமைச்சராக இருந்த காலப் பகுதியில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அவர் ஆராய்ந்ததுடன் யாழ்ப்பாண நெடுந்தூர பஸ் நிலையம், யாழ். மாநகரசபை புதிய கட்டடம் போன்றவற்றை பார்வையிட்டு தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் நெடுந்தூர புதிய பஸ் நிலையம் திறக்கப்பட்ட பின்னரும் பாவனைக்கு வராமல் இருப்பது தொடர்பாக அப்பகுதியில் உள்ள வர்த்தகர்களுடன் அவர் கலந்துரையாடினார். (அ)

## வெளிநாட்டுக்கு சென்று திரும்புவோர் கடும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர்!

### சுகாதார பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 05

நாட்டில் அடையாளம் காணப்பட்ட ஒமைக்ரோன் தொற்று உறுதியான பெண் குறித்து நேற்று முன் தினம் வரை எந்த தகவலும் தமக்கு கிடைக்கவில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

வெளிநாட்டுப் பயணங்களை முடித்துவிட்டு நாடு திரும்பும் பயணிகளை வழிநடத்துவதில் பாரிய பிரச்னை உள்ளதாகவும் அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

குறித்த பெண்ணும் அவரது கணவரும் நவம்பர் 24ஆம் திகதி நைஜீரியாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

இவர்களை தனிமைப்படுத்திய விடயம் உள்ளிட்டவை குறித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

இந்த சூழ்நிலையில் அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் இதுவரை தனிமைப் படுத்தலுக்கு அனுப்பப்படவில்லை என்றும் உபுல் ரோஹன குறிப்பிட்டார்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத குறித்த பெண் எவ்வாறு வெளிநாடு சென்றார் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுகாதாரக் கண்காணிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மிகுந்த கவலையளிப்பதாக உபுல் ரோஹண தெரி வித்தார். (அ)

## யாழில் கரை ஒதுங்கும் உடல்கள்; மரபணு பரிசோதனை வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்.குடாநாட்டு கரையோரங்களில் 6 நாள்கள் இடைவெளியில் கரை ஒதுங்கிய 6 உடல்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்தவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். குடாநாட்டு கடல் பரப்பில் கடந்த 27ஆம் திகதி முதல் 2ஆம் திகதிவரை 6 உடல்கள் கரை ஒதுங்கியுள்ளன. அவை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெடுந்தீவு, கட்டைக்காடு, சக்கோட்டை, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் கரை ஒதுங்கின.

இவ்வாறு கரை ஒதுங்கிய உடல்கள் தற்போது அரச வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளபோதும் எந்தவொரு சட்ட நடவடிக்கையோ அல்லது அது தொடர்பான ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாதமை கடும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் கடத்தல்கள், கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல் என்னும் திணிப்புகளை கண்டமையால் இயல்பாகவே ஏற்படும் பதற்றம் தவிர்க்க முடியாதது.

இதனால் மீட்கப்பட்ட உடல்களில் ஒரு உடலையேனும் பகுப்பாய்வுக்கும் உடற்கூற்று பரிசோதனையுடன் மரபணுப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# எவ்விதமான நிபந்தனைகளுமின்றி தோட்டத் தொழிலாளருக்கு ரூ.1000!

## சபைக்கு வருகிறது விசேட சட்டம்

கொழும்பு, டிசெ. 05

**"மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஆயிரம் ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தும் சட்ட திருத்தத்தை விரைவில் கொண்டுவரவுள்ளேன்." -என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெறும் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், அதில் சிற்சில பிரச்னைகள் உள்ளன. நீதிமன்றத்திலும் வழக்கு இடம்பெறுகின்றது.

அந்த வழக்கு முடிவடைந்த பிறகு விசேட சட்டமொன்றை கொண்டுவருவேன். தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை அதன் ஊடாக மேற்கொள்ளப்படும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச அமைப்புகளும் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு வலியுறுத்தியுள்ளன. அதற்கான பொறிமுறை உருவாக்கப்படும். அதற்கான நடவடிக்கையை நாம் முன்கூட்டியே ஆரம்பித்துவிட்டோம்-என்றார். (அ)





# முல்லைத்தீவு சிவபுரத்தில் நீர்ப்பாசன திட்டம் திறப்பு

முல்லைத்தீவு, டிசெ. 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் சிவபுரம் கிராமத்துக்கான பம்பேஸ் நீர்ப்பாசனத் திட்டம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 50 மில்லியன் ரூபா செலவில் பம்பேஸ் நீர்ப்பாசனம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மோட்டர் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இரண்டு போக பயிர்ச் செய்கையை அங்கு மேற்கொள்ள முடியும்.

145 குடும்பங்கள் இந்த நிர்ப்பாசனத்தில் இருந்து பயன் பெறவுள்ளன.

இதனை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் வி.பிறேமகுமார், வடக்கு மாகாண பிரதம செயளாலர் சமன் பந்துலசேன, வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், பிரதேச செயலாளர், அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# சில தேவைகளுக்கு மட்டும் எரிவாயு விநியோகிப்பதற்கு அரசு அனுமதி!

கொழும்பு, டிசெ. 05

சில தேவைகளுக்காக மட்டும் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கைத்தொழில் மற்றும் மயான பயன்பாட்டுக்காக எரி வாயு சிலிண்டர்களை விநியோ கிக்க இரண்டு எரிவாயு நிறுவ னங்களுக்கும் அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்களுக்க இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வீட்டுப் பாவனைக்காக சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் மற்றும் லாப்ஸ் காஸ் பி.எல்.சி ஆகிய நிறுவனங்களுக்கு உள்நாட்டு எல்.பி. எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்தி ருந்தார்.

இந்நிலையில், கைத்தொழில் மற்றும் மயான பயன்பாட்டுக்காக மாத்திரம் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லாட்சி என்ன செய்தது என்று சொல்ல தனி மாநாடே ஏற்பாடு செய்யவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 05

நல்லாட்சி அரசாங்கம் நாட்டுக்கு என்ன செய்தது என்பதை தெரிவிப்பதாயின், தனியாக மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து சொல்லமுடியுமென முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நல்லாட்சி அரசாங்கம் என்ன செய்தது என்பதை மறந்துவிட்டு, இன்று நல்லாட்சி அரசாங்கம் மோசமாக செயல்பட்டதாகச் சிலர் குற்றம் சாட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்திருந்த சட்டங்கள், திட்டங்கள் என்பவை பற்றி அனைவரும் மறந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# விமான நிலையத்துக்குள் வெடிபொருள்களுடன் நுழைய முயன்றவர் கைது

கொழும்பு, டிசெ. 05

வெடிபொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் நுழைய முற்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாடகை வான் சாரதியான குறித்த நபர், பொட்டாசியம் பெர்குளோரேட் என்ற வெடிபொருட்களுடன் விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 25 கிலோகிராம் வெடிபொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் பயன்படுத்திய வாகனத்தின் உரிமையாளர், நீர்கொழும்பு - கிம்புலாப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பட்டாசு உற்பத்தியில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவரென பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த வானை, பட்டாசு உற்பத்தி தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதாகவும் சந்தேகநபர் குறிப பிட்டுள்ளார்.

விமான நிலையத்தில் தமது வாடகை வாகனத்தின் பயணம் நிறைவடைய உள்ள நிலையில், தாம் வானை விமான நிலையம் நோக்கி விரைவாக செலுத்தியமையால், அதிலிருந்த வெடிபொருளை அகற்ற மறந்துவிட்டதாகவும், சந்தேகநபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார். (அ)





# மீனவர் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி யாழ். நகரில் கையெழுத்து வேட்டை!

யாழ்ப்பாணம், டிசெ. 05

இழுவைமடி மீன்பிடித் தொழிலுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்தி நிலையான மீன்பிடித் தொழிலை உறுதிப்படுத்த கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயங்கம் மற்றும் வட மாகாண கடற்றொழிலாளர்கள் இணையும் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த கையெழுத்து சேகரிக்கும் நட வடிக்கை நேற்று யாழ். நகரப் பகுதியில் முன்னெடுக்கப் பட்டது.

மக்களிடம் பெற்றுக்கொள்ளப்படும் கையெழுத்துகளுடனான மகஜர் ஜனாதிபதி, சட்டமா அதிபர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்தாக தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில் நேற்று யாழ். நகர பகுதியில் அது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# களுத்துறைப் பகுதியில் படகுப்பாதை கவிழ்ந்தது

## ஒருவர் காணாமற்போயுள்ளார்

கொழும்பு, டிசெ. 05

களுத்துறை பிரதேசத்தில் களுகங்கையில் மிதப்பு பாலம் ஒன்று கவிழ்ந்ததில் ஒருவர் காணாமல் போயுள்ளார். இதன்போது, ஐந்து பேர் குறித்த மிதப்பு பாலத்தில் பய ணித்துள்ளனர்.

மேலும், மூன்று மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள் ஒன்றும் மிதப்புப் பாலத்தில் எடுத்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


அனர்த்ததில் சிக்கிய நான்கு பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில் ஒருவரை காணவில்லை என பொலிஸார் கூறினர்.

காணாமல்போனவரை தேடும் பணியில் கடற்படையினரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு படகு விபத்துக்குள்ளானபோது அதில் பயணித்த ஒருவர் உயிர் காக்கும் அங்கி அணிந்திருக்கவில்லை என பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ)




# ஆட்சி மாற்றங்களைப்போல புயலிலே தமிழ்ப் புத்தாண்டு



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

புதிய மொந்தையில் பழைய கள் - இதுவே பழைய பழமொழிதான். ஆனால், தமிழ் நாட்டில் நடக்கும் தற்போதைய விவாதங்களை விவரிக்க இதைவிடப் பொருத்தமான பழமொழி இருக்க முடியாது. சித்திரை முதல் நாள், அதாவது ஏப்ரல் 14ஆம் திகதியைத் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டாடவேண்டுமா அல்லது அந்த வழக்கத்தை மாற்றி, தை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடவேண்டுமா என்பது பற்றியதுதான் சர்ச்சை. முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், தை முதல் நாள்தான் தமிழ்ப்புத்தாண்டு என்று அறிவிக்க முடிவு செய்வார் போலிருக்கிறது. அரசு ஆணை விரைவில் வரக்கூடும் என அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

உலகெங்கிலும் உள்ள தமிழ்மக்கள், சித்திரை முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால், தி. மு. க இதற்கு விதிவிலக்கு. 2008இல் முதல்வராக இருந்த மு. கருணாநிதி, தமிழ்ப் புத்தாண்டை ஏப்ரல் 14ஆம் திகதியிலிருந்து ஜனவரி 14ஆக, தை முதல் நாளில் கொண்டாடப்படும் என்று மாற்றினார். 1935ஆம் ஆண்டில், அப்போதைய மதராசப்பட்டினமாக இருந்த சென்னையின் பச்சையப்பா கல்லூரியில் நடந்த ஒரு மாநாட்டில் பல தமிழறிஞர்கள், கவிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மறைமலையடிகள், திரு வி. கல்யாணசுந்தரம் போன்ற பிரபலமான அறிஞர்கள் பங்கேற்ற அந்த மாநாட்டில் தை ஒன்றாம் திகதிதான் தமிழ்ப்புத்தாண்டு என்று ஒருமனதாகத் தீர்மானம் செய்யப்பட்டது. இந்த மாநாட்டின் தீர்மானத்தைக் குறிப்பிட்ட கருணாநிதி, தமிழ்ப் புத்தாண்டு திகதியை மாற்றும் முடிவை அறிவித்தார். முன்பு, ஜூன் மாதம் கொண்டாடப்பட்ட திருவள்ளுவர் பிறந்தநாளை தை இரண்டாம் தேதியாகவும் மாற்றினார்.

தி. மு. க. வும் அந்தக் கட்சியின் திராவிட ஆதரவாளர்களும், சித்திரை என்பது சமஸ்கிருத வார்த்தை என்றும், சமஸ்கிருத 'சூழ்ச்சியாளர்கள்', தை முதல் நாள் இருந்த தமிழ் புத்தாண்டை சித்திரை ஒன்றாம் தேதியாக மாற்றினர் என்று கூறுகின்றனர். பெரும்பாலும் பகுத்தறிவாளர்களாக இருக்கும் இந்த சமூக அரசியல் குழுவில் உள்ள சில மத நம்பிக்கையாளர்கள், தை மாதம்தான் முருகனுக்கான மாதம் என்றும், தமிழர்கள் பாரம்பரியமாக தைப்பூசத்தன்றுதான் அவரது பிறந்தநாளைக் கொண்டாடுவார்கள் என்றும் கூறினர். விவசாயிகள் தங்கள் பயிர்களை அறுவடை செய்து சூரியனுக்கு வழிபாடு நடத்தி நன்றி தெரிவிப்பதும் தை முதல் நாளில்தான் என்றும் பலர் வாதிடுகின்றனர். சித்திரையைப் பஞ்சாங்கத்தோடு இணைத்த கருணாநிதி, தனக்குப் பஞ்சாங்கத்தில் நம்பிக்கை இல்லை என்றார்.

வேறு சில குழுக்கள், பல நூற்றாண்டுகள் முன்பே தை மாதம் ஒன்றாம் திகதி, தமிழ் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது என்று கூறுகின்றனர். தை மாதத்தில் தமிழக விவசாயிகள் தங்கள் பயிர்களை அறுவடை செய்யத் தொடங்குவார்கள். ஆகவே, அறுவடைக்கு நன்றி தெரிவிக்கும்விதமாக, அன்றைய தினம் சூரியனை வழிபடுவார்கள். இந்த நாள், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ்புத்தாண்டின் தொடக்கமும் அதுவேதான் என்கிறார்கள் இவர்கள்.

பரவலாகப் பயன்படுத்தப்படும் க்ரிகேரியன் ஆண்டுக்கு பதிலாக, திருவள்ளுவர் ஆண்டே அரசு ஆவணங்களில் பயன்படுத்தப்படும் என்று 1972இல் முதல்வர் கருணாநிதி அறிவித்தார். அன்றிலிருந்து எல்லா அரசு ஆவணங்கள், கெசட்டுகள் போன்றவற்றில் இந்த திருவள்ளுவர் ஆண்டு முறையே பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அதிகாரபூர்வமான நாட்காட்டியாகத் திருவள்ளுவர் ஆண்டு பயன்படுத்தப்படுகிறது. க்ரிகேரியன் நாட்காட்டியோடு ஒப்பிடும்போது, திருவள்ளுவர் நாட்காட்டியில் கூடுதலாக 31 ஆண்டுகள் இருக்கும் - அதாவது, இந்த வருடம் திருவள்ளுவர் நாட்காட்டியில் 2052ஆம் வருடம்.

க்ரிகேரியன் வருடத்தில் சித்திரை முதல் நாள் என்பது ஏப்ரல் 14ஆம் திகதி அல்லது அதற்கு முதல் நாள் வருகிறது. பல தலைமுறைகளாக, உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் இந்த நாளைத்தான் புத்தாண்டாகக் கொண்டாடிவருகின்றனர். மலைபடுகடாம் என்ற பண்டைய தமிழ் நூலில், சித்திரை மாதம் தொடங்கும்போது வேங்கை மரம் பூக்கும் என்றும், புத்தாண்டு தொடங்கியதை அதை வைத்துத் தெரிந்துகொள்ளலாம் என்றும் ஒரு குறிப்பு இருக்கிறது.

வேத ஜோதிடரும் எனது நண்பருமான ராமச்சந்திரனின் பல கணிப்புகள், சுற்றுச்சூழல் மற்றும் வானியல் ரீதியாக நிஜமாகவே நடந்திருக்கின்றன. சமீபகாலம் வரை 'டெக்கான் க்ரானிக்கிள்' பத்திரிகையில் நான் வேலைசெய்துகொண்டிருந்தபோது அவரது கணிப்புகளையும் பிரசுரித்திருந்தேன். "வானியல் சார்ந்த பல கணக்குகள் மூலமாக சித்திரை ஒன்றாம் நாள்தான் தமிழ் மக்களுக்கான புத்தாண்டு என்பது ஏற்கனவே சந்தேகமின்றி ஊர்ஜிதமாகிவிட்டது" என்று ராமச்சந்திரன் கூறுகிறார்.

"வானியல் என்பது மூடநம்பிக்கை அல்ல. எல்லாம் அறிவியல் ரீதியானது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 0600 அல்லது 0601 மணிக்கு சரியாக சித்திரை ஒன்றாம் நாள் மிகத்துல்லியமாக சூரியன் உதிக்கிறான். ஆனால், தை ஒன்றாம் நாளன்று சூரியன் உதிக்க 0639 அல்லது 0640 மணி ஆகலாம். சித்திரை ஒன்றாம் நாள்தான் தனக்கான புத்தாண்டு என்று சூரியனும் சுட்டுகிறார். அதனால்தான் சரியான நேரத்துக்கு நம்மை சந்திக்க

## சித்திரை முதலாம் திகதியே சரியாக காலை 6 மணிக்கு சூரியன் உதிக்கிறான்

வருகிறார்" என்று புன்னகைத்தார் ராமச்சந்திரன்.

சூரியனை ஒருமுறை சுற்றி வருவதற்கு பூமிக்கு 365 நாட்கள், ஆறு மணிநேரம், 11 நிமிடம், 48 நொடிகள் தேவைப்படுகின்றன. ராசிகளின் கணக்குப்படி, சூரியன் மீன ராசியிலிருந்து முதல் ராசியான மேஷத்துக்கு ஏப்ரல் 13ஆம் திகதி அல்லது 14ஆம் திகதி பயணிக்கிறார். இதுவே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம். இதே போல் ஏப்ரல் 13-16ஆம் திகதிகளில் விஷூ கொண்டாடும் மலையாளிகள், வைசாகி கொண்டாடும் சீக்கியர்கள், உகாதி கொண்டாடும் தெலுங்கு மற்றும் கன்னட மக்கள், போஹேலா பைஷாக் கொண்டாடும் வங்காள மக்கள் ஆகியோருக்கும் இந்தக் கணக்குதான் அடிப்படை.


லண்டன் 'தை தமிழ் பண்பாட்டு மாதம்' பிரகடனத்தில்

இந்த வேத ஜோதிடரைக் கலந்து ஆலோசிக்க விரும்பும் 'ஈழநாடு' வாசகர்கள், 919444052460 என்ற அவரது சென்னை மொபைல் எண்ணுக்கோ, 914424892460 என்ற தொலைபேசி எண்ணுக்கோ அழைக்கலாம். தனது இந்து மதம் மற்றும் கலாசாரம் பற்றி மிகவும் பெருமிதம் கொள்ளும் இவர், உங்களது கேள்விகளுக்கு புன்னகையுடனும் பொறுமையுடனும் பதில் சொல்வார். ஐயோ, அவருக்கு நான் விளம்பரம் செய்யவில்லை, ஒரு நல்ல மனிதரை உங்களிடம் அறிமுகப்படுத்துகிறேன். உங்களுக்குத் தெரிந்துகொள்ள ஆர்வம் இருந்தால் அவரிடம் பேசலாம்.

2011இல் ஜெயலலிதா பதவிக்கு வந்தபோது, தை ஒன்றாம் திகதி தமிழ்ப்புத்தாண்டு தொடங்குகிறது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும், சித்திரை ஒன்றாம் திகதிதான் தமிழ்ப் புத்தாண்டு என்பதற்கான ஆழமான ஆதாரங்களும் வழக்கமும் உண்டு என்றும் கூறினார். லட்சக்கணக்கான தமிழர்களின் மனதை இது புண்படுத்தினாலும், சுய விளம்பரத்துக்காக மட்டுமே கருணாநிதி தமிழ்ப் புத்தாண்டை மாற்றினார் என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டினார். புத்தாண்டை சித்திரைக்கு மாற்றினார்.

இப்போது ஜெயலலிதா இல்லை, அவரது கட்சியான அ. இ. அ. தி. மு. க தேர்தலில் பெருந்தோல்வியை சந்தித்திருக்கிறது. தி. மு. க. வின் உதயசூரியன் தமிழ்நாட்டில் மீண்டும் எழுந்திருக்கிறது. முதலமைச்சர் ஸ்டாலின், தை முதலாம் திகதியைப் புத்தாண்டாக அறிவிப்பதற்கான தயாரிப்பில் இருக்கிறார். இந்த விஷயத்தில் அவரது அதிகாரிகள் கொஞ்சம் சொதப்பிவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். தை முதலாம் திகதிக்கு இன்னும் ஆறு வாரங்களே உள்ள நிலையில், இதுபற்றிய எந்த அதிகாரபூர்வ அறிவிப்பும் வரவில்லை. மாறாக, அரசின் பொங்கல் பரிசு பைகள் மீது பொங்கல் வாழ்த்துகள், புத்தாண்டு வாழ்த்துகள் என்று அச்சிடப்பட்டதாக செய்தி வெளியானது. ஒரு புயல் கிளம்பியது.

பொங்கலுக்குப் பிறகுதான் சட்டசபையின் அடுத்த கூட்டம் நடைபெறும், ஆகவே, புத்தாண்டை மாற்றும் அறிவிப்பை வெளியிட அதுவரை காத்திருக்க முடியாது. ஓர் அவசரகால உத்தரவாக இதை முதல்வர் ஸ்டாலின் வெளியிடலாம் என்று அவரது தமிழ்தேசியம் நண்பர்களான திராவிட கழகம் ஐயா கி. வீரமணி, பா. ம. க தலைவர் மருத்துவர் ராமதாஸ் போன்றவர்கள் ஆலோசனை தந்திருக்கிறார்கள். இதுபோன்ற ஓர் அவசரகால உத்தரவுக்கு ஆளுநர் ரவி ஒரு பெரிய தடையாக இருப்பார். முன்னாள் காவல்துறை உளவுத்துறை அதிகாரியான ஆளுநர் ரவியை சமாளிப்பது தி. மு. க. வுக்குப் பெரும் சவாலாக இருக்கிறது. ஸ்டாலினின் திடீர் உத்தரவை அவர் அனுமதிக்கமாட்டார். ஆளுநரின் அனுமதியின்றி இந்த உத்தரவு சட்டமாகவும் மாற முடியாது.

பெயர் வெளியிட விரும்பாத ஒரு மூத்த அதிகாரி, "ஒருவேளை சித்திரை ஒன்றாம் திகதியே புத்தாண்டாகத் தொடரட்டும் என்று ஸ்டாலின் விடலாம். ஏற்கனவே தமிழ் தேசியத்தை சாராத பலர் இதுபற்றி அதிருப்தி தெரிவிக்கிறார்கள். பெரும்பாலானோர் சித்திரை முதலாம் திகதியைப் புத்தாண்டாகக் கொண்டாடவே விரும்புகிறார்கள்" என்று கூறினார்.

தனது தந்தையின் உத்தரவை ஜெயலலிதா மாற்றியதாலும், தமிழ் தேசிய வாதிகளுக்கு இதுதான் பிடிக்கும் என்ற எண்ணத்தாலும் இதுபோன்ற மாற்றங்களை செய்வதை விட்டுவிட்டு, மக்கள் பிரச்னைகளில் ஸ்டாலின் கவனம் செலுத்தவேண்டும். உலகெங்கிலும் உள்ள விஷயங்களை கவனித்து, எது முக்கியம் என்று தெரிந்துகொண்டு செயல்படுவது அவருக்கும் தமிழ் மக்களுக்கும் மிகுந்த பயனைத் தரும். கனடா பாராளுமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, தை மாதம் 'தமிழ் பண்பாட்டு மாதமாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது, லண்டன் மாநகர மேயரும் இதனை அறிவித்திருக்கிறார். கனடாவின் தேசிய கீதம் தமிழில் பாடப்படுகிறது. இந்தப் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும்கூட ஸ்டாலின் ரசிக்கலாம்.

மைதானம் பாதிக்குமேல் உறங்கியபிறகும், பேச்சாளர்கள் பேசிக்கொண்டே போவார்கள். படிப்பவரின் காப்பி ஆறிப்போனபின்னரும் எழுத்தாளர் எழுதிக்கொண்டே இருப்பார். உங்களது டிபனை தாமதப்படுத்தியதற்கு மன்னிக்கவும்.

நல்லதே நடக்கட்டும், மீண்டும் சந்திப்போம்.

●

# இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க திட்டமிடுகிறதா தென் இலங்கை?

தென் இலங்கையின் அரசியலில் அதிக நெருக்கடிகள் எழுந்துள்ள போது ஈழத் தமிழர் அரசியல் விடயத்தில் அதிக கவனத்துடன் செயல்படுகின்ற போக்கு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்ததை அவதானிக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயத்தை அடுத்து எழுந்துள்ள நெருக்கடியை கையாள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லி நோக்கி பயணமாகியுள்ளார். அவரின் பயணம் பொருளாதார தேவைகளுக்கானதாக அமைந்தாலும் அதன் உள்ளார்ந்த நோக்கம் ஈழத்தமிழரின் அரசியலை கையாளும் பொறிமுறையாகவே தெரிகிறது. குறிப்பாக, சீனாவுக்கு எதிரான அணுகுமுறைகளை அதிகம் கொண்டுள்ள இந்தியா இலங்கைத் தீவில் தனது நகர்வுகளை அதிகரிக்கத் திட்டமிட்டு வருவதுடன் அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை இலங்கைக்கு எதிராகப் பலப்படுத்தி வருவதையும் கருத்தில் கொண்டு தென்னிலங்கை அரசியல் சக்திகள் செயல்படத் தொடங்கியுள்ளன. அந்த வகையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொறகொட இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை (30.11.2021) சந்தித்துள்ளமை ஏற்படுத்தக் கூடிய அரசியல் விளைவுகளை தேடுவதாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.





இந்தியப் பாதுகாப்பு அமைச்சரை மிலிந்த மொறகொட சந்தித்த போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து உரையாடப்பட்டது. அது மட்டுமின்றி இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு தரப்பின் உயர்மட்ட ஒத்துழைப்பை மீளாய்வு செய்வது தொடர்பில் இரு தரப்பினரும் உரையாடினர் எனவும் தெரியவருகிறது. அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ கடற்படைகளின் ஒத்துழைப்புக் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. மேலும், இலங்கைத் தூதுவர் அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் நியூ டைமன் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் ஏற்பட்ட விபத்தைக் கட்டுப்படுத்த இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கதென இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டமையும் முக்கிய விடயங்களாக அமைந்துள்ளன.

> **இந்தியப் பாதுகாப்பு அமைச்சரை மிலிந்த மொரகொட சந்தித்த போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்துவது குறித்து உரையாடப்பட்டது. அது மட்டுமன்றி இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு தரப்பின் உயர்மட்ட ஒத்துழைப்பை மீளாய்வு செய்வது தொடர்பில் இரு தரப்பினரும் உரையாடியதாகவும் தெரியவருகிறது.**

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கள் ஏற்கனவே வலுவாக உள்ளன என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகவுள்ளது. இலங்கையின் பொலிஸாருக்கு பயிற்சி வழங்குவது இராணுவங்களுக்கு இடையிலான கூட்டுப் பயிற்சியை நிகழ்த்துவது கடற்படை ரீதியில் ஒத்திகைகளை மேற்கொள்வது புலனாய்வுத் தகவல்களை பரிமாற்றிக் கொள்வதென பல விடயங்களில் நெருக்கமான ஒத்துழைப்பு நிலவுகிறது. ஏறக்குறைய பாதுகாப்பு ஒத்துழைப்பின் கணியத்துக்குள்ளேயே இலங்கை - இந்திய நட்புறவு காணப்படுகிறது. இது பற்றி 2020 இந்திய தேசிய பாதுகாப்பு செயலாளர் அஜித் டோவால் இலங்கைக்கு வருகை தந்த போது இலங்கை ஜனாதிபதியுடன் உரையாடியுள்ளமை கவனத்திற்குரியதாகும். இது ஏற்படுத்தக் கூடிய விளைவுகளே அதிகம் உரையாடப்பட வேண்டிய விடயமாகும்.

முதலாவது சீன - இலங்கை நட்புறவானது பாதுகாப்பு உடன்பாடு வரையான எல்லை வரை சென்றுவிட்டது. ஆனால், உடன்படிக்கை எதுவும் நிகழவில்லை. ஆனால், அதற்கு சமதையான இலங்கைக்குள் சீனா இராணுவதளம் ஒன்றை அமைப்பது பற்றிய உரையாடலை கொண்டிருக்கின்றது. அதனை அமெரிக்கா வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்கா கூறியது என்பதற்காக பல தரப்பிலும் நிராகரிப்பும் சந்தேகமும் இராணுவத் தளம் சார்ந்து நிலவியது. ஆனால், அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவின் குத்தகைக்கு போன பின்பு அதுவிடயத்தில் சீனா எடுக்கும் நடவடிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கட்டுப்பட வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. அப்படியாயின் இலங்கை சீனாவுடன் நெருக்கமான உறவையே பேணும் என்பதும் ஏற்றுக் கொள்ள வேண்டிய விடயமாகவே தெரிகிறது. அத்தகைய உறவின் பின்பே தென்னிலங்கை இந்தியாவுடன் நட்பு கொள்ள முனைகிறதென்பது அவதானத்திற்குரிய விடயமாகும். இந்தியா அத்தகைய சீன - இலங்கை நெருக்கத்தை தமது எல்லைக்குள் அல்லாது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் குவாட் நாடுகள் கட்டமைப்பு வரை விஸ்தரிக்க திட்டமிட்ட போதே இலங்கை, இந்தியா - அமெரிக்கா - ஐரோப்பிய நட்பை முதன்மைப்படுத்த ஆரம்பித்தது. அப்படியாயின் இலங்கை -இந்திய உறவானது சீனா-இலங்கை நெருக்கத்தை அடுத்ததாகவே நோக்கப்பட வேண்டியதாகும்.


இரண்டாவது பிராந்திய சர்வதேச அரசியல் ஒழுங்கு உறுதியான நிலையை எடுக்கவில்லை. சீனாவா அல்லது அமெரிக்காவா அல்லது ஒருமைய உலக ஒழுங்கா அல்லது பல்துருவ உலக ஒழுங்கா என்ற குழப்பம் நிலவுகிறது. தென் சீனக்கடல் பகுதியிலிருந்து தென் இந்து சமுத்திரம் வரை அமெரிக்க - இந்திய - ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒருபுறமும் சீனா - ரஷ்யா மறுபுறமுமாக முரண்பாடு நிலவுகிறது. ஆனால், இதுவரை எந்த நாடும் உலக ஒழுங்கைத் தீர்மானிக்கும் வலிமை கொண்டதாக மாறவில்லை. அப்படியாயின் உலக ஒழுங்கில் ஒரு குழப்பம் நிலவுகிறது என்பது உறுதியாகிறது. இத்தகைய குழப்பம் இலங்கை அரசிடமும் உண்டு. அதேநேரம் அத்தகைய குழப்பத்தை எதிர்கொள்ளும் உத்தியும் இலங்கை ஆட்சியாளரிடம் காணப்படுகிறது. அது அவர்களுக்கு அவர்களின் முன்னோடிகளான அரசியல் தலைமைகளும் புலமையாளர்களும் கற்றுக் கொடுத்ததாகும். அதாவது, நெருக்கடியை எப்படி முகாமை செய்வதென்பதை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் காலம் காலமாக பின்பற்றி வெற்றி கண்டுவருகின்றனர்.

அதனால், இந்தியாவை அணுகுவதென்பதும் இந்தி யாவை கையாளுவதென்பது இலங்கை ஆட்சியாளருக்கு சாதாரணமான என்பதே இதுவரையான அவதானிப்பாகும். ஆனால், கடந்த காலங்களைவிட தற்போது இந்தியாவை கையாளுவதற்காக அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது. அதாவது, இந்தியா இலங்கையில் தெளிவான பாதுகாப்பு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரயத்தனத்துடனேயே உள்ளது. அதனை அடையும் வரை எந்த விட்டுக் கொடுப்புக்கும் போகத் தயாரில்லாத நிலை காணப்படுகிறது.

மூன்றாவது, அவ்வகை பாதுகாப்பு உத்தரவாதத்தை அல்லது பாதுகாப்பு உடன்பாடு ஒன்றை முழுமைப்படுத்த இந்தியா எத்தனிக்கிறது என்பதும் அதனை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கூடியவரை தவிர்க்கவும் முயல்வதையே காணமுடிகிறது. இத்தகைய சூழலில் இந்தியாவுக்கு சாதகமான பதில் ஏற்பட்டலோ அல்லது இலங்கைக்கு சாதகமான வாய்ப்பு ஏற்பட்டலோ ஈழத்தமிழர் தமது அரசியல்வெளியை பயன்படுத்துவதில் அதிக சிக்கலை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். காரணம் தென்னிலங்கை ஒருபோதும் சீனாவை நிராகரிக்கும் அரசியலை உருவாக்காது. அதே நேரம் சீனாவையும் இந்தியாவையும் அரவணைத்துக் கொள்ளவே அதிகம் முனையும். அதனையே தற்போது தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் தென்னிலங்கை எப்போதும் சீனா பக்கமே. அவ்வாறு பயணிப்பது இலங்கையின் புவிசார் அரசியலுக்கும் பூகோள அரசியலுக்கும் பொருத்தமானது. அதில் தென்னிலங்கை ஆட்சியாளர் எவருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க வாய்ப்பில்லை. அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலேயே அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. எனவே, அதனால் ஒரு தெளிவான அரசியல் வெளி ஈழத்தமிழருக்கு நிரந்தரமானதாக அமைய வாய்ப்புள்ளது. அத்தகைய வெளிக்குள்ளால் ஈழத்தமிழர் பயணிப்பதென்பது இந்தியாவுடனான நட்புறவிலேயே தங்கியுள்ளது. இவை அனைத்தும் கடந்து இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றுக்கு தென்னிலங்கை பயணிக்க தீர்மானிக்குமாயின் ஈழத்தமிழர் தலைகீழான நிலைக்குள்ளேயே தள்ளப்படுவார்கள். அதற்கான வாய்ப்பு மிகக்குறைவானதே.

நான்காவது இலங்கைத் தீவின் புவிசார் அரசியலையும் பூகோள அரசியலையும் கையாளும் திறன் இந்தியாவிடமே காணப்படுகிறது. எனவே, இந்தியாவிலிருந்தே ஈழத்தமிழர் தமது அரசியலை கையாளும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். தென்னிலங்கைக்கு இந்தியாவுடன் அரசியல் பொருளாதார பாதுகாப்பு உடன்பாடுகள் வலுவடைந்தாலும் ஈழத்தமிழருக்கான அரசியல் வெளி வெற்றிடமாகவே காணப்படும். அதனை பயன்படுத்தும் நிலைக்குள் தமிழ் அரசியல் தலைமைகள் செயல்பட வேண்டும். அமெரிக்காவும் இந்தியாவும் நட்புறவுள்ள சக்திகள் என்பதற்காகவோ குவாட் அமைப்பில் உறவுள்ள நாடுகள் என்பதற்காகவோ அமெரிக்காவிலிருந்து இந்தியாவை அணுக முடியாது. அது ஆரோக்கியமான அரசியலும் கிடையாது. அத்தகைய வெடிப்புகளே தற்போதைய நிலைக்கு காரணமாகும் என்பது ஈழத்தமிழரின் அனுபவமாக உள்ளது. அது மட்டுமல்ல, ஈழத்தமிழர் அமெரிக்காவை அணுக தென்னிலங்கை இந்தியாவை அணுகியதும் அதற்கான வெளியை ஏற்படுத்தியதும் ஈழத்தமிழரின் அரசியலேயாகும். தற்போது ஏற்பட்டுள்ள நகர்வுக்கு பதில் நகர்வை விரைவில் ஈழத்தமிழர் ஏற்படுத்த வேண்டும். இல்லையேல், தென்னிலங்கை அடுத்த கட்டத்தை எட்ட முயலும். அது உள்நாட்டில் பெரும் மாற்றங்களாக அமையும். குறிப்பாக வடக்கு - கிழக்கை நோக்கியதாக அமையும். எனவே, குழம்பியிருக்கும் உலகச் சூழலும் சீனாவின் தென்னிலங்கையுடனான நிலைத்திருப்பும் ஈழத்தமிழரின் அரசியல் வெளியை இலகுவாக்கியுள்ளது. அதனை தடுக்கும் பிரயத்தனங்களையே தென்னிலங்கை இந்தியாவிலும் உலக நாடுகள் மத்தியிலும் ஏற்படுத்தி வருகிறது. அதன் ஓரங்கமாகவே இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட இந்திய பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பின் உள்ளடக்கம் விளங்குகிறது.

- நன்றி - அருவி




**பூமியின் 70 சதவீதம் கடல் பரப்பாக இருப்பதால், விண்கற்கள் நிலத்தில் வந்து விழுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக் கின்றன. இதனால் தான் நாசா நிறுவனம் பூமிக்கு அருகே வரும் விண்கற்களை அவதானித்தபடி இருக்கின்றது. அவற்றால் உடனடியாக எந்த ஆபத்தும் இல்லை என்பதை நாசா உறுதிப்படுத்தி இருக்கின்றது.**

# பூமிக்கு அருகே வரும் நிரெஸ் விண்கல்! பாதிப்பு ஏற்படுமா?

**குரு அரவிந்தன்**

அறிவியல் உலகில் விண்கற்கள் பற்றி சிறிதளவாவது நாம் அறிந்திருப்பது நல்லதென நினைக்கின்றேன். 4660 என்ற இலக்கத்தைக் கொண்ட நிரெஸ் விண்கல் (4660 Nereus) டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி பூமிக்கு சுமார் 3.9 மில்லியன் கிலோ மீற்றர் அருகே வருகின்றது. சூரியனைச் சுற்றி வரும் இந்த விண்கல், 2060 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இதைவிட இன்னும் அருகே, 1.2 மில்லியன் கிலோ மீற்றர் அருகே வரவிருக்கின்றது.

சூரியக்குடும்பத்தில் சூரியனைச் சுற்றிவரும், இந்த விண்கல்லால் உடனடிப் பாதிப்பு இல்லாவிட்டாலும், பூமிக்கு ஆபத்தான விண்கற்களின் பட்டியலில் இதுவும் இடம் பெற்றிருக்கின்றது. இதனுடைய திசை காலப் போக்கில் மாற்றமடையவும் வாய்ப்புண்டு. 1982 டிபி என்பது இதன் முன்னைய பெயராகும்.


1082 அடி நீளமானது, அதாவது பாரிஸ் கோபுரத்தைவிட சற்று உயரமானது. 2 கிலோ மீற்றர் குறுக்களவைக் கொண்டது. 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி எலியநோர் கெலின் என்ற அமெரிக்க பெண் வானியலாளரால் கண்டு பிடிக்கப் பட்டது. இவர் பூமிக்கு மிகஅருகே வரும் விண்கற்களை இனங்காணும் நாசாவின் திட்டத்தில் பணியாற்றியதால், இவருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது. இந்த விண்கல் சூரியனைச் சுற்றி வருவதற்குச் சுமார் 1.82 வருடம் எடுக்கின்றது.

‘ஓநாய் வருகிறது’ என்ற வேடிக்கைக் கதைபோல, இது போன்ற அஸ்ரோயிட் என்று சொல்லப்படுகின்ற விண்கற்கலால் பூமிக்கு ஒரு நாள் ஆபத்து ஏற்படலாம். ஜப்பான் நாட்டின் விண்கலம், இதைக் கண்காணிக்க அனுப்பப்பட இருந்தாலும், அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இதை அருகே சென்று கண்காணிக்க முடியவில்லை.



தினமும் ஏராளமான சிறிய விண்கற்கள் பூமியில் விழுந்த வண்ணம்தான் இருக்கின்றன. அவை பூமியை நோக்கி வரும்போது, அவற்றின் வேகம் காரணமாக வளிமண்டலத்தில் உராய்வு ஏற்பட்டு அதன் காரணமாக அனேகமான கற்கள் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. அதையும் மீறிச் சில கற்கள் பூமியைத் தாக்குகின்றன. மனிதர்கள் இதனால் இதுவரை அதிகம் பாதிக்கப்படவில்லை.

1954 ஆம் ஆண்டு அலபாமாவில் வீட்டுக் கூரையை உடைத்து விண்கல் விழுந்ததில் ஒரு பெண் காயடைந்திருந்தார். இதுவரை பூமியில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப் பெரிய விண்கல் நமீபியா நாட்டில் விழுந்த கோபா, 60 தொன் எடை உள்ளதாகும். பொதுமக்கள் பார்வைக்காக அந்த விண்கல்லை இப்பொழுதும் அந்த இடத்திலேயே வைத்திருக்கிறார்கள்.




1908 ஆம் ஆண்டு ரஸ்யாவில் விழுந்த விண் கல்லைத் துங்குஷ்கா நிகழ்வு என்று சொல்கிறார்கள், காரணம் துங்குஷ்கா ஆற்றில் இது விழுந்தது. ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுக்குண்டைவிட 185 மடங்கு சக்திவாய்ந்ததாக இருந்தது. பல்லாயிரக் கணக்கான காடுகள் இதனால் அழிக்கப்பட்டன. 1922 ஆம் ஆண்டு வோல்கோகிராட் பகுதியில் விண்கற்கள் மழை கொட்டுவது போல விழுந்தன. அதில் ஒரு பெரியகல் 284 கிலோ எடையுள்ளதாக இருந்தது. 2002 ஆம் ஆண்டும் இது போல இர்குட்ஸ் பகுதியிலும் விண்கற்கள் விழுந்தன. 2003 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் விழுந்த விண்கலின் எடை 17 கிலோவாக இருந்தது.

சில விண்கற்களில் இரும்பு 90 சதவீதமும், சுமார் 8 சதவீதம் நிக்கலும் கலந்து இருக்கும். சாதாரண விண் கல்லைவிட இது எடை கூடியதாக இருக்கும். செவ்வாய், புதன் கிரகங்களில் மோதலால் வெடித்துப் பறந்த கற்களும் பூமியில் வந்து விழுந்திருக்கின்றன. ஏனைய கற்களோடு சேர்ந்திருந்தால் இவற்றை இனங்காணுவது கடினம். அரிசோனாவில் விண்கல் விழுந்ததால் ஏற்பட்ட பெரிய பள்ளம் astrobleme ஒன்று உள்ளது. சுமார் ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன் இப்படியான மிகப்பெரிய விண்கல் ஒன்று பூமியைத் தாக்கியதால்தான் டையனோசர்கள் அழிந்தன என்று ஆய்வாளர் குறிப்பிடுவர்.

பூமியின் 70 சதவீதம் கடல் பரப்பாக இருப்பதால், விண்கற்கள் நிலத்தில் வந்து விழுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக்கின்றன. இதனால்தான் நாசா நிறுவனம் பூமிக்கு அருகே வரும் விண்கற்களை அவதானித்தபடி இருக்கின்றது. அவற்றால் உடனடியாக எந்த ஆபத்தும் இல்லை என்பதை நாசா உறுதிப்படுத்தி இருக்கின்றது. ஆனாலும் வருங்காலங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று பூமிக்கு அருகே உள்ள சில விண்கற்களைக் கவனமாக அவதானிக்கின்றது. தேவை ஏற்படின் அவற்றைச் சிறு துண்டுகளாக உடைப்பதற்கும் நாசா ஏற்பாடுகளைச் செய்கின்றது. இயற்கை அழிவு தவிர்க்க முடியாதது. அது எப்படியும், எப்போதும், ஏற்படலாம், யார் அறிவார்? ■

**“ விளையாட்டுத் துறையில் இருக் கும் ஆண்கள் எல் லோரும் எதையும் தாங்கும் பலசாலிகள் கல் நெஞ்சக்காரர்கள் என்ற கண்ணோட்டத்தில் இருந்து மாறுபட்டு அவர்களும் சாதாரண மனிதர்கள், உடல் மற்றும் உளம் சார்ந்த பிரச் னைகளை அனுபவிக்ககூடிய வர்கள் என்ற ரீதியில் காண்பித் திருப்பது பார்வையாளர்கள் தங்களுடன் பொருத்தி பார்க்கும்படியாக உள்ளது.**




# அப்பிள் தொலைக்காட்சியில் வெளிவந்த 'டெட் லாசோ' தொடர் சொல்லும் கதை...

இங்கிலாந்தில் தோற்றுக் கொண்டிருக்கும் ரிச்மொண்ட் கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளரை அதன் உரிமையாளர் வேலையை விட்டு துரத்துகிறார். பிறகு அமெரிக்காவில் இருந்து இரண்டு பயிற்சியாளர்களை அழைத்து வருகிறார். அதில் பிரதானமானவர் டெட் லாசோ. ஆனால் இந்த பயிற்சியாளர்களோ அமெரிக்கன் க்ரிட்யன் என்று சொல்லப்படும் வேறு வகை கால்ப்பந்தாட்டப் பயிற்சியாளர்கள். இவர்களை ரிச்மொண்ட் அணியும் அதன் ரசிகர்களும் ஏற்றுக்கொள்கிறார்களா? என்பதை சொல்லும் அப்பிள் தொலைக்காட்சியில் வெளி வந்த தொடரே “டெட் லாசோ”

2013 அமெரிக்காவில் இ.பி.எல் போட்டிகள் பிரபல்யம் இல்லாத காலகட்டம். இ.பி.எல் போட்டிகளை உள்ளூரில் பிரபலப்படுத்த அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று கற்பனை ரீதியாக உருவாக்கிய கதாப்பாத்திரங்களே டெட் லாசோவும் அவரின் உதவியாளரும். இந்த கதாப்பாத்திரங்களும் அவர்களின் நகைச்சுவையும் வெகுளித்தனமும் கலந்த கால்பந்து சம்பந்தப்பட்ட பேச்சு அமெரிக்காவில் பெரிய அளவில் வரவேற்பு பெற்றது. அந்த கதாப்பாத் திரங்களை மையப்படுத்தி இந்த தொடர் உருவாகியது.

டெட் லாசோ என்ற கதாப்பாத்திரம் பாரம்பரிய அமெரிக்க குடும்ப பிண்ணனியில் இருந்து வரும், எல்லோருக்கும் உதவ துடிக்கும் ஒரு நல்ல மனிதராக உருவாக்கப்பட்டுள்ளது. இவர் இங்கிலாந்திற்கு வரும் போது அவர் புதிய கலாச்சரத்தை எதிர் நோக்குகிறார். இங்கிலாந்து கலாச்சாரம் மற்றும் அவரின் உதைப்பந்தாட்டம் பற்றிய அறியாமையை அவர் வெளிப்படுத்தும் இடங்கள் சிரிப்பை ஏற்படுத்தும். அவர் தங்கியிருந்த ஊர் மக்கள், ஊடகங்கள், அவர் பயிற்றுவிக்கும் அணி கூட அவரை ஏற்கவில்லை. எல்லோரும் அவரை ஏளனம் செய்த படி இருப்பார்கள்.






அந்த நேரத்திலும் புன்முறுவல் பூத்து எல்லோர் மனதையும் கவருகிறார்.

இந்தத் தொடர் புகழின் உச்சத்தை தொட்ட விளையாட்டு வீரர்கள் எதிர் நோக்கும் பிரச் னைகளான போட்டி பொறாமை, அகங்காரம், நிறவெறி, பகிடிவதை, ஊடகங்களின் பின் தொடர்வு, இரசிகர்ளின் போற்றல் தூற்றல், அணி உட்பூசல்கள், மற்றும் மூத்த வீரர்கள் தங்கள் ஓய்வு பெறும் வயதில் சந்திக்கும் உடல் உளம் சார்ந்த பிரச்சனைகளை நகைச்சுவை கலந்து சொல்கிறது.

விளையாட்டுத்துறையில் இருக்கும் ஆண்கள் எல்லோரும் எதையும் தாங்கும் பலசாலிகள் கல் நெஞ்சக்காரர்கள் என்ற கண்ணோட்டத்தில் இருந்து மாறுபட்டு அவர்களும் சாதாரண மனிதர்கள், உடல் மற்றும் உளம் சார்ந்த பிரச்னை களை அனுபவிக்ககூடியவர்கள் என்ற ரீதியில் காண்பித்திருப்பது பார்வையாளர்கள் தங்களுடன் பொருத்தி பார்க்கும்படியாக உள்ளது.

பாடசாலை சிறுமி, முதல் உதைப்பந்தாட்ட கழக நிர்வாக தலைமை பொறுப்பு வகிக்கும் பெண்கள் வரை விளையாட்டுத்துறையில் சந்திக் கும் பாகுபாடுகள், பிரச்னைகளை நாசுக்காகவும் நகைச்சுவையுடனும் சொல்லி இருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



ரமணி - அவுஸ்திரேலியா

இந்தத் தொடரை டெட் லாசோ வாக எழுதி நடித்த ஜேசன் ஸூடிகிஸ் அனைவரின் பாரட்டை பெற்றுள் ளார். இருபது ஏமி விருது பரிந்துரைகள், ஒரு கோல்டன் க்ளோப் விருது என சாதனைகள் படைத்துக்கொண்டி ருக்கிறது இந்தத் தொடர்.

ஆனாலும் இரண்டாம் பாகம் முதலாம் பாகம் அளவுக்கு நகைச்சுவைக்கு முக்கியம் கொடுக்கவில்லை என்றும், அளவுக்கு மீறிய அளவில் அப்பிள் பொருட் களுக்கு விளம்பர உள்ளீடு செய்துள்ளமையும் பார்வை யாளர்கள் மத்தியில் பெரிதும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடக்கும் இ.பி.எல் கால்பந்துப் போட்டிகள் ஒரு மதம் போன்று ரசிகர்களால் வெறித்தன மாக கொண்டாடப்படுகிறது. அந்தவகையில் உலகெல் லாம் வாழும் தமிழர்களும் அதற்கு விதி விலக்கல்ல. மென்ஜெஸ்டர், லிவர்பூல், ஆர்சனல், செல்ஸி, டொடன் ஹாம் என பல இ.பி.எல் அணி களிக்கு தமிழ் இளை யோர் மத்தியில் பெரும் இரசிகர் வட்டாரங்கள் உண்டு. அந்த வகையில் இந்தப் போட்டி கள் நடக்கும் விளை யாட்டரங்குகளில் காட்சிபடுத் தியமையும், திருவிழா போன்று காண்பிக்கப்படும் உதைப்பந்தாட்ட போட்டிச் சூழழும் இரசிகர்களை உற்சாகப்படுத்தும்.

வாழ்கையில் இன்பமோ துன்பமோ புன்முறுவலு டன் ஏற்றுகொள்ளலாம், உள ரீதியிலான பிரச்னைகள் யாரும் எதிர் நோக்கலாம் என்ற உள்ளார்ந்த கருத்துக ளுடனும், மனதை கவரும் கதாப்பாத்திரங்களுடனும், சிரிக்கவைக்கும் நகைச்சுவைகளோடும் வரும் டெட் லாசோவை திருப்தியுடன் பார்க்கலாம். ■

# ஈழத்து தமிழ் நாவலிலக்கியத்துறையில் ஆழமாக தடம்பதித்த கணேசலிங்கன்

**தனது இறுதிக்காலம்வரை எழுத்துலகில் தன்னுடைய கனதியான கருத்துக்க ளாலும் காத்திரமான கதை சொல்லும் முறையாலும் வாசகர்களைத் தன்பக்கம் இழுத்து வைத்திருந்த செ.கணேசலிங்கன் சமூக அக்கறையுடைய ஓர் எழுத்தாளர். ஏனைய எழுத்தாளர்களையும் உயர்த்திவிடும் உன்னத பணியை ஆற்றியவர்.**

அமிர்தலிங்கம் பௌநந்தி



ஈழத்து தமிழ் நாவலிலக்கியத் துறையில் ஆழமாகத் தடம் பதித்த செ.கணேசலிங்கன் எனும் மகோன்னத எழுத்தாளர் மறைந்த செய்தி மனதை நெருடுகிறது. யாழ்ப்பாணத்தின் உரும்பிராய் கிராமத்தில் 1923.03.09 அன்று இராசம்மா செல்லையா இணையரின் புதல்வனாகப் பிறந்த செ.கணேசலிங்கன், சாதிக் கட்டமைப்பு இறுக்கமாகக் காணப்பட்ட சமூகப் பின்னணியில் தோன்றி சமூக விடுதலைக்காக பல்வேறு கோணங்களிலும் ஆழமாகக் குரல்கொடுத்தவர். கல்வியில் சிறந்து விளங்கி எச்.எஸ்.சி பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு நுழையும் வாய்ப்பைப் பெற்றபோதும் பொருளாதார நிலைமை காரணமாக அரச பணியில் சேர்ந்துகொண்டார்.

1960 இல் ஸ்ரீமதி மீனாம்பாள் என்பவரைத் திருமணம் செய்துகொண்டு 3 பிள்ளைகளுக்குத் தந்தையானார். சமூகப் புரட்சி நோக்கிய சிந்தனையின் வெளிப்பாடாகத் தனது திருமணத்தைத் திருக்குறள் ஓதி தமிழ் முறையில் நடத்தி னார். ஆரம்பத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றத் தொடங்கி பல இடங்களி லும் தன்னுடைய எழுத்துக்கான விரிந்த பார்வை அனுபவங்களை உள்வாங்கிக் கொண்ட கொண்டார்.

சிறுவயதிலிருந்தே பரந்த வாசகனாகத் திகழ்ந்த செ.கணேசலிங்கன், கொக்குவில் குமாரசுவாமிப் புலவர், வித்துவான் வேந்தனார், வித்வான் நடேசன் ஆகியோரிடம் தமிழைக் கற்றுக் கொண்டார் . காந்திய சிந்தனையினால் கவரப் பட்ட கணேசலிங்கன் முற்போக்கு எழுத் தாளர் சங்கத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டார். மகாத்மா காந்தி இறந்த போது முற்போக்கு அணியினரை அழைத்து 'மகாத்மா காங்கிரஸ்' என்ற சங்கத்தை நிறுவி, அதன் முதலாவது செயலாளராகவும் விளங்கினார். எஸ்.பொ., டொமினிக் ஜீவா ஆகியோரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். கம்யூனிஸ்ட் கார்த்திகேசனது கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட அவருடைய எழுத் துக்களில் அந்த சித்தாந்தத்தைத் தரிசிக்க முடிகிறது. பேராசிரியர் க.கைலாசபதி பேராசிரியர் க.சிவத்தம்பி தமிழக எழுத் தாளர் அகிலன், டாக்டர் மு.வரதராஜன், பயண எழுத்தாளர் சோமலே போன்ற பலருடன் நெருங்கிய இலக்கியத் தொடர்பு கொண்டிருந்தார்.

தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகள் இவரது ஆரம்பகால எழுத்துக்களை ஊக்குவித்தன. தவிரவும் சரஸ்வதி, தினபதி ஆகியவற்றிலும் எழுதிவந்தார். ஆரம்பகாலத்தில் கட்டுரை, சிறுகதை ஆகியவற்றில் ஆர்வம் காட்டிய செ.கணேசலிங்கனுக்கு நாவல் இலக்கியத் துறையே நீடித்து நிலைத்த பெயரை ஈட்டிக் கொடுத்தது. 1950 'மன்னிப்பு' என்ற சிறுகதையோடு புனைகதை உலகில் பிரவேசித்தார். 1958 இல் 'நல்லவன்' என்ற அவருடைய முதலாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. 1960 'ஒரே இனம்' என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. பின்னர் பல சிறுகதைத் தொகுதிகளைப் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைகளில் 'சாயம்' என்ற சிறுகதை ரஷ்ய மொழியிலும், 'கொடுமைகள் தாமே அழிவதில்லை' என்ற சிறுகதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருடைய சிறுகதைகள் சாதிய முரண்பாடு, பெண் விடுதலை, அரசியல் பிரச்னைகள், வர்க்க முரண்பாடுகள் ஆகியவற்றைப்பற்றிப் பேசின.

1950களின் பிற்பகுதியிலிருந்து மாக்சியக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட செ.கணேசலிங்கன் 1965 இல் 'நீண்ட பயணம்' என்னும் நாவலுடன் நாவலிலக்கியப் பரப்பில் பிரவேசித்தார். இதுவரை அண்ணளவாக 50 நாவல்கள் எழுதியுள்ளார். அவருடைய நாவல்களில் சடங்கு, போர்க்கோலம், செவ்வானம், தரையும் தாரகையும், மண்ணும் மக்களும், வதையின் கதை, ஓர் அரசியலின் கதை, ஒரு மண்ணின் கதை, தேன் பறிப் போர், சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, விலங்கில் அடிமைகள், வன்முறை வடுக்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன.

கணேசலிங்கன் நாவல் சிறுகதைகள் மட்டுமன்றி ஆழமான கருத்துக்கள் செறிந்த கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். பெண்ணடிமை தீர என்ற அவருடைய கட்டுரைத் தொகுதி சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

செ. கணேசலிங்கன் அவர்களும் மொழி பெயர்ப்பு முயற்சியில் ஈடுபட் டுள்ளார் அபலையின் கடிதம் என்ற யேர்மனிய நாவலைத் தமிழ் படுத்தினர். தன்னுடைய வாழ்கதை வரலாற்றை 'திரும்பிப் பார்க்கிறேன்' என்ற நூலில் எழுதியுள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக குமரன் என்ற மார்க்சிய மாதாந்த சஞ்சிகை ஒன்றையும் 1971 முதல் 1983 வரை வெளியிட்டார். 1983 இல் தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்த செ. கணேசலிங்கன் அங்கிருந்து தன்னுடைய எழுத்துமுயற்சிகளைக் காத்திரமாகவும் சுதந்திரமாகவும் தொடர்ந்தார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக குமரன் பதிப்பகத்தை நிறுவி தரமான நூற்றுக் கணக்கான நூல்களைப் பதிப்பித்துள்ளார். இன்று குமரன் பதிப்பகத்தை அவருடைய மகன் குமரன் அவர்கள் பொறுப்பேற்று சிறப்புற நடத்தி வருவது மனம் கொள்ளத்தக்கது.

அவருடைய நாவல்களில் சாதிய விடுதலை, சமூக விடுதலை, வர்க்க முரண்பாடு, அரசியல் ஒடுக்குமுறைகள், பெண் விடுதலை, ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஏற்ற இறக்கங்கள், வறுமை பாலியல் சுரண்டல், பொருளாதாரப் பிரச்சினைகள், சுரண்டல், அவற்றால் மக்கள் அடைந்த துயரங்கள் எனப் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆழமாக நோக்கியுள்ளார்.

இவரது பல நாவல்கள் தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பாடப் புத்தகங்களாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. நீண்ட பயணம் என்ற இவரது நாவல் இலங்கையில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பாடப் புத்தகமாக இருந்து வந்தது. இன்று ஆசிரியர் கலாசாலை தமிழ் நெறி மாணவர்களுக்கான பாடப் புத்தகமாகக் காணப்படுகிறது. இவரது படைப்புகள் பற்றி பலவேறு ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. செ.கணேசலிங்கன் நாவல்கள் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் அவருடைய நாவல்களை முதுதத்துவமாணிப் பட்ட ஆய்விற்காக திரு அமிர்தலிங்கம் பௌநந்தி அவர்கள் ஆய்வு செய்து அதன் பின்னர் குமரன் புத்தக இல்ல வெளியீடாக நூலுருப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

தனது இறுதிக்காலம்வரை எழுத்துலகில் தன்னுடைய கனதியான கருத்துக்களாலும் காத்திரமான கதை சொல்லும் முறையாலும் வாசகர்களைத் தன்பக்கம் இழுத்து வைத்திருந்த செ. கணேசலிங்கன் சமூக அக்கறையுடைய ஓர் எழுத்தாளர். ஏனைய எழுத்தாளர்களையும் உயர்த்திவிடும் உன்னத பணியை ஆற்றியவர். 98 வயதில் நேர்ந்த அவரது இழப்பு தமிழிலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாததாகும். ■

# கனடிய மக்களை ஆச்சரியப்படுத்திய பல வடிவப் பனிக்கட்டிகள்...



குரு அரவிந்தன்

மனிற்ரோபா ஏரியின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள தண்ணீர் சென்ற வாரம் உறை நிலை எய்திய போது, சிறிய பந்துகள் போன்று மாற்றமடைந்திருப்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு இயற்கையான காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம் என நம்புகின்றார்கள்.

வின்னிப்பெக்கில் இருந்து 200 கிலோ மீட்டர் வடமேற்கே இந்த ஏரி இருக்கின்றது. 200 கிலோ மீட்டர் நீளமான இந்த ஏரி கனடாவின் 14வது பெரிய ஏரியாகவும், உலகின் 33வது பெரிய ஏரியாகவும் இருக்கின்றது. சுமார் 30 மில்லியன் டொலர் பெறுமதியான மீன்கள் வருடாவருடம் இங்கே பிடிக்கப்படுகின்றன. ஸ்ரீப்றொக் என்ற இப்பகுதியில், இந்த ஏரி நீர் ஒரு போதும் இப்படி மாற்றம் அடைந்ததில்லை. சாதாரணமாக பனிக்காலத்தில் மேற்பரப்பு உறைந்த நிலையில் தட்டையாகக் காணப்படும். ஆனால் இம்முறை ஏரியின் மேற்பரப்பில் இப்படி வித்தியாசமான சிறு உருண்டைகள் தோன்றியிருப்பது அங்கிருக்கும் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

மதநம்பிக்கை உடையவர்கள் இதற்கு வேறுகாரணங்கள் சொல்லலாம், அறிவியல் சார்ந்த கருத்துக்களைக் கேட்டபோது அவர்கள் தெரிவித்த கருத்து என்வென்றால், ஏரியின் தண் ணீர் உறை நிலைக்குச் செல்லும் போது, மேற்பரப்பில் குளிர் காற்று வீசினால், அதனால் மேல் மட்டத்தில் சிறிய அலைகள் தோன்றும். அப்படித் தோன்றும் போது, அவை திரண்டு சிறு கற்கள் போல மாறி, பனிப்பந்துகளாக மறிவிடலாம். காற்றின் வேகத்தையும், உறைநிலை அடைய எடுக்கும் நேரத்தையும் பொறுத்து அவற்றின் உருவ அமைப்புக்கள் மாறுபடலாம். இந்த இரண்டு நிலையும் ஒரே சமயத்தில் நடந்தால் இப்படி மாறுவதற் கான சாத்தியங்கள் இருப்பதாக அல்பேர்ட்டா பல்கலைக்கழக பேராசிரியரும், பனிப்பாறை நிபுணருமான ஜெவ் கவன்னாக் இது பற்றிக் கருத்துத் தெரிவித்தார்.

சமீபத்தில் சட்பரி பகுதியில் உள்ள வானபிட்ரி (Wanapitei River) ஆற்றங்கரையில் தண்ணீர் உறைந்தபோது, மிகவும் வித்தியாசமாக பனிக்கட்டிகள் பான்கேக் வடிவத்தில் வட்டம் வட்டமாக இருந்ததாகச் சட்பரியைச் சேர்ந்த டக் ஜோடோயின் என்பவர் தெரிவித்தார். ஒட்டாவாவில் பனிப் பொழிவின் போது 'றோள்ஸ்' வடிவத்தில் பனிக் கட்டிகள் இருந்ததாக டேவிட் பிலிப்ஸ் தெரிவித்தார். குறைந்தது 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசினால்தான் மென்மையான பனிப்படலம் உருண்டு உறையும் போது, இப்படி றோள்ஸ் வடிவம் பெற்றிருக்க லாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். சிறிய குச்சிகள் வடிவத் திலும் பனி உறையும்போது மாற்றமடைவதுண்டு. 'துருவப் பகுதி களில் இது போன்ற நிகழ்வுகள் நடக்கலாம், ஆனால் இது போன்ற மாற்றங்களை இதுவரை இங்கே கண்டதில்லை' என்று மனிற்ரோபா பல்கலைகழக பேராசியரான யூலியான ஸ்ரோவ் தெரிவித்தார். எல்லாப் பொருட்களும் மூலக் கூறுகளால் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதை அடர்த்தி என்று சொல்வார்கள். அந்தவகை யில், பூஜ்ய டிகிரி செல்சியஸில் தான் பனிக்கட்டிகள் உறையும் என்பதால், தண்ணீரைவிட அவை அடர்த்தி குறைவாக இருக்கின்றன. அதனால்தான் பனிக்கட்டிகள் தண்ணீரில் மிதக்கின் றன. கனடாவில் பனிக்காலத் தில் ஆறுகள், குளம், குட்டைகள், எரிகள் உறைநிலைக்குச் செல்வது காலாகாலமாய் நடந்து கொண்டே இருக்கின்றது. இக்காலத்தில் இது போன்ற பல வடிவங்களில் பனிக்கட்டிகளைக் கனடாவில் காணமுடியும். ■



## மீண்டும் ரீத்து வர்மா

தமிழின் முன்னணி நடிகரான சிவகார்த்தி கேயன் டாக்டர் பட வெற்றிக்கு பின்னர் தென்னிந்தியா முழுவதும் பிரபலமாகியுள்ளார்.

தெலுங்கு பட இயக்குநர் அனுதீப் இயக்கத்தில் இவர் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தில் நடிகை ரீத்து வர்மா கதாநயாகியாக நடிக்கவுள்ளார். தமிழில் “கண்ணும் கண்ணும் கொள்ளையடித் தால்“ படத்தில் நடித்திருந் தார். அந்தப் படம் பெரு வெற்றி பெற்றது. அடுத்து தீனி என்ற படத்தில் அசோக் செலவனுடன் நடித்தார். இந்நிலையில் அவர் மீண்டும் தமிழுக்கு மீண்டு வரவுள்ளார் என்பது அவரின் ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தயாராகும் மேதகு -2




தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு மேதகு என்ற பெயரில் திரைப்படமாக வெளியானது. கிட்டு என்பவர் இயக்கி இருந்த இப்படம் கடந்த ஜூன் மாதம் நேரடியாக ஒடிடியில் வெளியானது. தற்போது இதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. இதனை தமிழீழ திரைக்களம் நிறுவனம் தயாரித்துள்ளது.

இதில் தலைவர் பிரபாகரனின் இளம் வயது சம்பவங்கள் அதிக அளவில் இடம் பெறுகிறது. முதல் பாகத்தைப் போல் இந்த திரைப்படமும் உலக தமிழர்களிடம் இருந்து நன்கொடை பெறப்பட்டு அதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படத்தை அறிமுக இயக்குநர் யோகேந்திரன் இயக்கி உள்ளார்.



## இனி தைரியமான வேடமே...

நாக சைதன்யாவை பிரிந்த சமந்தா, தற்போது புதிய படங்களில் ஒப்பந்தமாவதில் கவனம் செலுத்தி வருகிறார். தென்னிந் தியாவில் பிரபலமான அவர் பொலிவூட்டிலும் கால் பதிக்கவுள்ளார்.

இந்த நிலையில், ஒரு சஞ்சிகையின் முகப்பு படத்திற்காக கவர்ச்சி படங்களை கொடுத்துள்ளார். அத்துடன், வழக்கமான கதாபாத்திரங்களில் இனி நடிக்கப்போவதில்லை என்று கூறியுள்ள சமந்தா, தைரியமான வேடங்களில் நடிப்பதில் அதிக ஆர்வம் செலுத்தி வருகிறார்.

# திரை விமர்சனம்




**இயக்கம் : பிரியதர்ஷன்**
**நடிகர்கள் : மோகன்லால், அர்ஜுன், பிரபு, சுனில் ஷெட்டி, பிரணவ் மோகன்லால், கீர்த்தி சுரேஷ், மஞ்சு வாரியர், கல்யாணி பிரியதர்ஷன், ஹரீஷ் பெராடி, அசோக் செல்வன், நெடுமுடி வேணு, முகேஷ் மற்றும் பலர்.**
**இசை : ராகுல்ராஜ், அங்கிட் சூரி மற்றும் ரோனி ரபேல்**
**ஒளிப்பதிவு : திரு**

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குஞ்சாலி மரைக்காயர் என்கிற கடற்படை தலைவன் பற்றிய வீர வரலாறாக உருவாகியுள்ளது இந்தப்படம்.

முகமது அலி என்கிற குஞ்சாலியின் குடும்பம் உறவினர்களின் துரோகத்தால் ஆங்கிலேயரின் கைகளில் சிக்கி சின்னாபின்னமாகிறது. தனது தாய் தன் கண்ணெதிரேஆங்கிலேயரின் கையால் உயிர் விடுவதை பார்த்து ஒன்றும் செய்ய முடியாமல், தனது சித்தப்பாவுடன் தப்பிக்கிறார் இளைஞன் குஞ்சாலி. சாமுத்ரிகா அரசு ஆட்சி செய்யும் நாட்டிற்கு சென்று தஞ்சம் அடையும் குஞ்சாலி (மோகன்லால்), அங்கே ராஜா நெடுமுடி வேணு நல்லவராக இருந்தாலும் அவரது உத்தரவை நிறைவேற்றும் கீழ்மட்டத்தில் இருப்பவர்களால் மக்கள் பாதிக்கப்படுவது கண்டு அவர்களுக்கு வேண்டிய நல்லதை செய்யும் றொபின்ஹூட் ஆக மாறுகிறார், மேலும் ஆங்கிலேயர் மீது கொண்ட வெறுப்பால், கடலில் வரும் அவர்களது கப்பல்களை கொள்ளையடித்து, அவற்றை நிர்மூலமாக்குகிறார்.

வெள்ளையரின் ஆதிக்கத்தை விரும்பாத ராஜா, குஞ்சாலி மரைக்காயரின் நேர்மையையும் வீரத்தையும் கண்டு, அமைச்சர் ஹரீஷ் பெராடியின் ஆலோசனைப்படி அவரை அழைத்து தனது கப்பற்படை தலைவர் ஆக்குகிறார். அவரது இந்த நியமனத்தை தரைப்படை தளபதி அர்ஜ/ன் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாலும், ஏற்கனவே தன்னிடமிருந்த பதவியை பிடுங்கி கொண்டதால் அவரது தம்பி அசோக் செல்வன் மோகன்லால் மீது கோபமாகிறார்.

இதற்கிடையே அடுத்து நடக்கும் கடற்படை போரில் ஆங்கிலேயர் கப்பலை அர்ஜ/னுடன் இணைந்து தனது சாகசமான யுக்திகள் மூலம் தரைமட்டமாக்குகிறார் மோகன்லால். இதனால் அவரின் மதிப்பு இன்னும் உயர்கிறது. இந்தநிலையில் அரண்மனையின் இன்னொரு முக்கியஸ்தரான முகேஷின் மகள் கீர்த்தி சுரேஷை திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார் அசோக் செல்வன். ஆனால் கீர்த்தியோ, மோகன்லாலின் வலதுகரம் போல விளங்கும் சீன வீரனை காதலிக்கிறார்.

இருவரும் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்துகொண்டு மோகன்லாலின் இடத்திற்கே சென்று தஞ்சம் அடைகிறார்கள். தம்பிக்கு கீர்த்தியை மணம் முடித்து வைப்பதாக வாக்கு தந்த அர்ஜ/ன், உண்மை நிலவரம் அறிந்து கீர்த்தியை அழைத்துப்போக அங்கே வருகிறார். வந்த இடத்தில் அசோக் செல்வனின் சூழ்ச்சியால், நல்ல மனிதர்களின் மனம் கூட சில நேரம் தடுமாற, அடுத்தடுத்து மூன்று உயிர்ப்பலிகள் நிகழ்கின்றன.

இதனால் மோகன்லாலுக்கும் அரசாங்கத்துக்குமாக ஒரு பகை திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. ஒருகட்டத்தில் ராஜாவின் பங்காளிகள் சிலர் ஆங்கிலேயரின் சொல்படி ஆட்சியை நடத்த, ராஜாவும் வேறு வழியின்றி அவர்களது கைப்பாவையாக மாறுகிறார். இந்த சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி மோகன்லாலை பணியவைக்க திட்டுமிடுகின்றனர் ஆங்கிலேய அதிகாரிகள். வீரத்தால் வெல்ல முடியாத அவரை துரோகத்தால் வீழ்த்த முடிவு செய்கின்றனர். இறுதியில் வீரம் வென்றதா..? துரோகம் வென்றதா..? என்பதே மீதிக்கதை.

ஆங்கிலேயருக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய குஞ்சாலி மரைக்காயர் பாத்திரத்தில் மோகன்லால். அவரின் உடைகளும் குதிரை மேல் அமர்ந்து அவர் வரும் கம்பீரமும் கடற்படை தாக்குதலில் அவர் ஈடுபடும் இலாவகமும் காணும் போது அவரை மரைக்காயராக றொம்ப எளிதாக உள்வாங்கிக்கொள்ள முடிகிறது. அவரின் இளமைப்பருவ கதாபாத்திரமாக அவரின் மகன் பிரணவ் மோகன்லாலே நடித்திருப்பது சிறப்பு.

தவறு செய்பவன் தம்பியே ஆனாலும் தவறுதான் என நியாயத்தின் பக்கம் நிற்கும் தளபதியாக அர்ஜ/னின் பாத்திர படைப்பு பெருமைப்பட வைக்கும் விதமாகவே உருவாக்கப்பட்டுள்ளது. மோகன்லாலுக்கும் அவருக்குமான அந்த கணநேர தவறான புரிந்துணர்வு காரணமாக அர்ஜ/னுக்கு ஏற்படும் முடிவு பரிதாபப்பட வைக்கிறது.

இராச்சியத்தை அபகரிக்க நினைக்கும் உறவினர்களுடன் சேராமல், குருநாதரின் வழி நடத்தல்படி நல்லவர் பக்கம் நிற்கும் வீரனாக சுனில் ஷெட்டி. படத்தில் இவர் தனித்து சாதிக்கும் விஷயம் என எதுவும் இல்லாவிட்டாலும் பக்கபலமாக நின்றுள்ளார் என்றே சொல்லலாம். இளமைப்பருவத்தில் மோகன்லாலுடன் சின்னதாக உரசலில் அறிமுகமானாலும் கடைசி வரை அவர் கூடவே வரும் ஆத்மார்த்த நண்பனாக பிரபு, வழக்கம் போல குணச்சித்திர நடிப்பில் மிளிர்கிறார். மோகன்லால் மூலமாக பாதிக்கப்பட்டு அவருக்கு எதிராக திரும்பும் அந்த கதாபாத்திரத்தில் வெகு இயல்பாக பொருந்தியுள்ளார் அசோக் செல்வன்.

வெறும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே வந்து அப்பாவியாக உயிரை விடுகிறார் கல்யாணி பிரியதர்ஷன். நண்பர்களாக பழகி வருபவர்களுக்குள் ஒரு பிரளயமே நடப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது. ஆனால், இது எதையுமே உணராத கதாபாத்திரத்தில் கீர்த்தி சுரேஷ், கூட்டத்தில் ஒருவராக கடந்து செல்கிறார்.

இவர்களை தாண்டி படம் முழுதும் நட்சத்திரக்குவியல் இன்னும் உள்ளது.

கதை நிகழும் காலகட்டத்திற்கே நம்மை அழைத்து சென்றதில் கலை இயக்குநர் சாபு சிறில் தான் ஒரு வித்தகன் என மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார். கூடவே ஒளிப்பதிவாளர் திருவின் பங்கும் அசாத்தியமானது. குறிப்பாக கடற்போர் காட்சிகளை பிரமிக்க வைக்கும் விதமாக படமாக்கி இருக்கிறார்கள். ராகுல்ராஜின் பின்னணி இசை பாடல்களும் பின்னணி இசையும் திருப்தி ரகம்.

கலகலப்பான, உணர்வுப்பூர்வமான படங்களையே கொடுத்துவந்த பிரியதர்ஷன், வரலாற்று கதைகளையும் தன்னால் இயக்க முடியும் என சாதித்து காட்டியுள்ளார். ■

# நிரபராதிகளென விடுதலையாவது நீதியானதா? தண்டனையிலிருந்து விடுபடுவதா?

**2020**ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையின் நீதிமுறைமையில் முக்கியமானதொரு போக்கு மேலெழுந்து வருகின்றது - நிதி மோசடி, நிதிக் கையாடல், அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் கொலை போன்ற பல குற்றங்களை இழைத்தவர்கள் நீதிமன்றங்களால் குற்ற விடுவிப்பு வழங்கப்பட்டு சுதந்திரமாக வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்ற அல்லது ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்படும் போக்கே இவ்வாறு மேலெழுந்து காணப்படுகின்றது.

இவர்கள் மீதான மேலதிக நீதிமன்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியாமைக்கு போதிய சான்றுகள் இன்மை, தொழில்நுட்ப தவறுகள், வழிமுறைத் தவறுகள் மற்றும் நீதியுடன் தொடர்புடைய அமைப்புகளில் கோவையாக்கல் தொடர் செயன்முறைகளில் ஏற்படும் இடைவெளிகள் என்பன காரணமாக முன்வைக்கப்படுகின்றன. இவற்றின் மூலமாக குற்றம்சாட்டப்பட்டவர் தண்டனை விலக்குப் பெறல் மற்றும் விடுவிக்கப்படல் என்பவற்றில் இவை செல்வாக்கு செலுத்துகின்றன. இவ்வாறான செயல்பாடுகளில் எந்தவிதத் தவறும் கிடையாது என ஒருவர் வாதிட முடியும். எவ்வாறாயினும், இந்த முறைமையான வகையில் அமைந்த போக்குகள் இந்த யதார்த்தத்துக்கு வெளியே செயல்படுவதைப் புரிந்துகொள்வது முக்கியமானதாகும். மார்ச் 2020 தொடக்கம் ஒக்ரோபர் 2021 வரையான காலப்பகுதிக்குள் அவ்வாறான 17 பெரும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

திவிநெகும வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டமை.

சில் துணி வழக்கில் இருந்து முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டமை.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையின் பிரதான சந்தேகநபரான மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுதலை செய்யப்பட்டமை.

39 இலட்சம் ரூபாய் நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டிலிருந்து விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டமை.

50 இலட்சம் ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் சுங்கப் பணிப்பாளர் ரஞ்சன் கனகசபை அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டமை.

நிதி முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மற்றும் இரு சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டமை.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் மேலும் இருவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட 4 கோடி ரூபாய் இலஞ்ச வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டமை.

மிஹின் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பதவி விகித்த போது 88.3 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன விடுதலை செய்யப்பட்டமை.

7 கோடி ரூபாய் பெறுமதியான காணிகளை சட்டவிரோதமாக கையகப்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன மற்றும் அவரது மனைவி ஆகியோர் அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டமை.

பிரகடனப்படுத்தப்படாத மற்றும் சட்டவிரோதமாக சம்பாதித்த 412 கோடி ரூபாய் பணம் மற்றும் சொத்துக்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன விடுதலை செய்யப்பட்டமை.

நிசங்க சேனாதிபதி உட்பட எட்டு சந்தேகநபர்கள் அவன்ட் கார்ட் நிறுவனத்தின் ஊடாக அரசுக்கு 1140 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியமை மற்றும் நிதி முறைகேடுகளில் ஈடுபட்டமைக்காக அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டமை. ஊடகவியலாளர் நிமலராஜன் மயில்வாகனம் படுகொலை வழக்கின் பிரதான சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட் டமை.

2015இல் GI குழாய்களைப் பெறுவதற்காக 3.65 கோடி ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோர் அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டமை.

இந்த வழக்கு விசாரணைகளின் ஆரம்பம், வழக்குகளின் தாக்கல், விசாரணை என்பவற்றின் தன்மை போன்றவற்றைக் கருத்திற் கொள்ளும்வேளை பல பொதுவான அம்சங்கள் அடையாளம் காணப்பட முடியும். இந்த அனைத்து வழக்குகளும் கடந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளாகும்.

இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர்களின் பிரதான எதிர் வாதங்களாக, இந்த வழக்குகள் அடிப்படையற்றன மற்றும் இவை அரசியல் பழிவாங்கல்களுக்காக தொடுக்கப்பட்ட வழக்குகள் என்பன அமைந்திருந்தன. நாட்டின் நீதி கட்டமைப்புக்கு ஏற்ப ஒரு நபருக்கு எதிராக குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்படும் நிலையில் குறித்த நபரினால் அதற்கு எதிராக நீதியின் அடிப்படையில் அமைந்த பல செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். குற்றம் தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றை சமர்ப்பிக்க முடியும். உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றையும் சமர்ப்பிக்க முடியும். அந்த மனுவில் அவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதை அல்லது மீறப்படவுள்ளதை குறித்துக் காண்பிக்க முடியும். மேலும், அரசியல் அமைப்பின் உறுப்புரை 140 இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் எழுத்தாணை மனு (தடையுத்தரவு) ஒன்றையும் கோர முடியும்.

எவ்வாறாயினும், 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் சந்தேகநபர்கள் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பதற்கு மேற்குறித்த எந்தவொரு முன்னெடுப்பையும் மேற்கொண்டிருக்கவில்லை. சந்தேகநபர்கள் பெரும் நிதிமோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களுக்குத் தண்டனை விலக்களிப்பது - அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுதலை செய்யப்படுவது பொருளாதாரத்தை மேலும் வலுவிழக்கச் செய்வதுடன் சர்ச்சைக்குரிய கொலை வழக்கு ஒன்றின் முக்கிய சந்தேகநபர் இவ்வாறு அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்படுவது சட்டத்தின் ஆட்சி மற்றும் ஒழுங்கு என்பவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பு

நீதிமன்றங்களால் கொலைக் குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட இரண்டு நபர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் மிருசுவிலில் 5 வயதுக் குழந்தை ஒன்று உள்ளடங்கலாக 8 பேரின் கொலை தொடர்பில் இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்னாயகவுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் கடந்த ஜூலை 2015இல் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்திருந்தது, இவருக்கு ஜனாதிபதி மன்னிப்பளித்தார்.


தனுஷ்க சில்வா

கடந்த ஜூலை 2021இல் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியதுடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டது. பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் அரசியல் படுகொலையின் பிரதான சந்தேகநபரான அவருக்கு கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பு உயர்நீதிமன்றம் குற்றத்தீர்ப்பு வழங்கியிருந்தது, இத்தீர்ப்புக்கு எதிராக அவரால் தொடுக்கப்பட்ட மனு உச்ச நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பின் உறுப்புரை 34 இற்கு ஏற்ப ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் குறித்த வழக்கின் தலைமை நீதிபதியிடம் இருந்து ஓர் அறிக்கை பெறப்பட்டு அவ்வறிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் அறிவுரையைப் பெற்றபின்னர் இறுதியாக நீதியமைச்சரின் பரிந்துரையின் பின்னரே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படும். முந்தைய ஜனாதிபதிகளைப் போலல்லாது ஜனாதிபதி கோட்டாபய மன்னிப்பு வழங்குவதில் இவ்வழி முறையை பின்பற்றியதாகத் தெரியவில்லை.

## ஜனாதிபதியின் புதிய அணுகுமுறை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஊழல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கில் சாத்தியமான அளவுக்கு நீதி மற்றும் அமைப்பு முறைமைகளை வலுப்படுத்தும் கொள்கை உள்ளடங்கியிருந்தது. மேலும் அவர் கடந்த அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு நீதி வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

ஜனவரி 2015 தொடக்கம் ஒக்ரோபர் 2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் பற்றி விசாரணை செய்யவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் ஆணைக்குழு ஒன்று விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக் குழு 40 சம்பவங்களை அரசியல் பழிவாங்கல்களாக அடையாளம் கண்டு அவை தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் நிலுவையில் இருந்த இலஞ்ச மற்றும் ஊழல் வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கு பரிந்துரை செய்தது.

இந்த வழக்குகள் தொடர்பில் சந்தேக நபர்கள் இருந்தவர்கள் நிரபராதிகளென தீர்மானிக்கப்பட்டமைக்கு செல்வாக்குச் செலுத்திய தொழில்நுட்பப் பிரச்னைகளில் போதிய சான்றுகள் இன்மை, சான்றுகளில் இசைவு மற்றும் தொடர்ச்சி என்பன இன்மை, காலம் கடந்துள்ளமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க முடியாமை என்பன உள்ளடங்கியிருந்தன. இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழு 17 வழக்குகளில் மூன்று வழக்குகளை வாபஸ் பெறத் தீர்மானித்தது. வழக்குகளில் காணப்பட்ட தகவல்களின் தன்மை, போதிய சான்றுகள் இன்மை என்பன இந்நிலைக்கு காரணங்களாக அமைந்திருந்தன.

இதன் விளைவாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டீ வாஸ் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். அலி ரொஷான் உள்ளடங்கலான நான்கு பேர் போதிய சான்றுகள் இன்மையினாலும், சுங்கத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் வழங்கப்பட்ட சான்றுகளில் உள்ள முரண்பாடுகள் காரணமாக நிரபராதிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். பிள்ளையான், வாஸ் குணவர்தன மற்றும் அவரது மனைவி ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் நிமலராஜன் கொலை வழக்கின் குற்றச்சாட்டுகள் என்பன சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வாபஸ் பெறப்பட்டமை இவற்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்களின் விடுதலைக்கு வழிவகுத்தது.

மேலும், எட்டு வழக்குகளில் இருந்து 27 நபர்களுக்கு தண்டனை விலக்கு வழங்கப்பட்டு வர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இலஞ்சம், ஊழல் அல்லது குற்றவியல் தொடர்பு காரணமாக குற்றம் சாட்டப்பட்டிருந்த 43 சந்தேகநபர்கள் நீதிமன்றங்களால் தண்டனை விலக்களிக்கப்பட்டனர் அல்லது விடுதலை செய்யப்பட்டனர். ■

ஈழநாடு



# சுவையான இலக்கிய விடயங்களுடன் ஞானம்

கலை, இலக்கிய சஞ்சிகையான ஞானம் மாத இதழின் டிசெம்பர் மாத இதழ் சாகித்தியரத்தினா விருதுபெறும் பல்துறை ஆளுமையான மு.சிவலிங்கத்தின் அட்டைப்படத்துடன் வெளிவந்திருக்கின்றது.

வழமையான இலக்கிய விடயங்களுடன், அட்டைப்படத்தை அலங்கரிக்கும் மு. சிவலிங்கம் குறித்த சிறப்புக் கட்டுரையை ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரனே எழுதியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


இலங்கை அரசின் உயர் விருதான சாகித்தியரத்னா விருதை இவ்வருடம் மு. சிவலிங்கம் பெற்றுக்கொள்ளும் நிலையில், அவரை கௌரவிக்கும் முகமாக இந்த மாத ஞானத்தின் அட்டைப்பட நாயகனாக அவர் இடம் பெற்றிருக்கின்றார்.


“மலையக மக்களின் யதார்த்த வாழ்க்கையைப் பிரதிபலித்து அவர்களது துயரங்கள், அவலங்கள், ஏக்கங்கள், அவர்களை ஏய்க்கும் அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்களின் நடவடிக்கைகள் போன்றவற்றைத் தமது சிறுகதைப் படைப்புகளில் துணிச்சலுடன் வெளிப்படுத்தி வருகின்றவர்” என மு. சிவலிங்கம் குறித்து ஞானசேகரன் எழுதுகின்றார்.

“சமூக எதிரிகள் இவரது கதை மாந்தர்களூடாக நையப்புடைக்கப்படுகின்றனர். சமூக அக்கறை மிக்க ஒருவராகத் திகழும் இவர் தனது கருத்துக்களை பாமர மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் நையாண்டியாகவும் அதே வேளை அறுதியிட்டும் கூறும் அஞ்சாத படைப்பாளி” எனவும் மு. சிவலிங்கத்தின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றார் ஞானம் ஆசிரியர்.

இதனைவிட, பேராசிரியர் செ. யோகராஜா, ஏ. பீர்முகமது, தமிழ்மணி மானாமக்கீன், சந்திரகௌரி சிவபாலன் (ஜேர்மனி), தி. ஞானசேகரன் ஆகியோரின் கட்டுரைகள், தாமரைச்செல்வி (அவுஸ்திரேலியா), அன்டனூர் சுரா (தமிழ்நாடு), மதிவதனி (சுவிட்சர்லாந்து), மைதிலி தயாபரன் ஆகியோரின் சிறுகதைகள், கவிதைகள், பேராசிரியர் துரை மனோகரன் எழுதும் வழமையான பத்தி உட்பட சுவையான இலக்கிய விடயங்களைத் தாங்கி வெளிவந்திருக்கின்றது டிசெம்பர் மாத ஞானம்.

**தொடர்புகளுக்கு :**
**0094-11-2586013,**
**0094-77-7306506**




# சிறுகதைகளுக்கு களம் அமைக்கும் சஞ்சிகை

வளர்ந்த - வளரும் படைப்பாளிகளுக்கான களம் என்ற மகுடத்துடன் வெளிவரும் “சிறுகதை மஞ்சரி”யின் ஐப்பசி மாத இதழ் கடந்த வாரம் வெளிவந்திருக்கின்றது. சிறுகதை மஞ்சரியின் 15 ஆவது இதழ் இது.

பிரபல எழுத்தாளர் மு.தயாளனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இந்த சஞ்சிகை, சிறுகதைகளுக்கென்றே வெளியிடப்படும் ஒரு சஞ்சிகை என்பது குறிப்பிடத்தக்கது. மைக்கல் கொலின், த. சரண்யா ஆகியோர் உதவி ஆசிரியர்களாக உள்ளார்கள்.

40 பக்கங்களுடன் வெளிவந்திருக்கும் இந்த ஐப்பசி மாத இதழில் சுமார் 10 சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றது. நாடறிந்த எழுத்தாளர்கள் மட்டுமன்றி, புதிய எழுத்தாளர்களும் எழுதியிருக்கின்றார்கள். மூத்த எழுத்தாளர் செ. கணேசலிங்கன் எழுதிய கொடுமைகள் தாமே அழிவதில்லை என்ற சிறுகதை இந்த மாதத்துக்குரிய சிறப்புச் சிறுகதையாக இடம்பெற்றிருக்கின்றது. அண்மையில் மறைந்த பிரபல எழுத்தாளர் நந்தினி சேவியர் குறித்து மு. தயாளன் எழுதியுள்ள குறிப்பு இந்த இதழில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. இலக்கிய உலகில் நந்தினி சேவியர் பதித்த தடங்களையும், அவருடனான தனது நீண்ட கால நட்பு குறித்தும் இதில் விபரிக்கிறார் தயாளன்.

சிறுகதை மஞ்சரியில் ஆரம்பம் முதலே எழுதிவரும் நந்தினி சேவியர், “எழுத்தின் அனுபவங்கள்.” என்ற தலைப்பில் தன்னுடைய இலக்கிய வாழ்க்கையை தொடராக எழுதிவருகின்றார். இறப்பதற்கு முன்னதாகவே அந்தத் தொடருக்கான அத்தனை அத்தியாயங்களையும் அவர் எழுதி முடித்து அனுப்பிவைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது தொடர் சிறுகதை மஞ்சரியின் இறுதிப்பக்கத்தை அலங்கரிக்கின்றது.

பல தளங்களிலில் இருந்தும் சிறுகதைப் படைப்புகள் இங்கு உணர்வுகளின் வழி பயணிக்கும் மனதுக்குள் யாத்திரை செய்ய வைக்கின்றன.

**சிறுகதை மஞ்சரியைப் பெற்றுக்கொள்ள தொடர்புகளுக்கு: 0094 765554649**

# நீங்காத நினைவுகளில்... மலையக மண்ணின் மைந்தர்கள்

ஓய்வு நிலை அமைச்சுச் செயலாளரும் மலையகக் கல்வியாளருமான எம்.வாமதேவனின் நான்காவது நூலாக வெளிவந்துள்ளது “நீங்காத நினைவுகளில்... மலையக மண்ணின் மைந்தர்கள்...”

1966ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி ஹப்புத்தளை, பெரகலை மண்சரிவில் உயிர்நீத்த தனது தந்தை, சகோதரிகளுக்கும் 2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23ஆம் திகதி உயிர்நீத்த தனது அம்மாவுக்குமாக இந்தப் புத்தகத்தை சமர்ப்பணம் செய்துள்ளார் எம். வாமதேவன்.

இந்நூல் 17 ஆளுமைகளைப் பதிவு செய்துள்ளது. கல்வி, தொழிற்சங்கம்/ அரசியல், நிர்வாகம், இலக்கியம், ஊடகம் என துறைசார் வியடங்களாக பிரித்து அத்துறையில் வாழ்ந்து மறைந்து தனக்கான தனித்துவ இடத்தை தக்க வைத்துச் சென்ற ஆளுமைகள் பற்றிய முழுமையான தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

மலையகம் சார் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், மலையக மாணவர்கள், மலையக ஆளுமைகள் பற்றி அறிந்திராத இக்கால தலைமுறையினருக்குக்கான ஒரு ஆவணமாக இந்நூல் இருக்கின்றது.

இலகுவில் வாசிக்கக் கூடியதான சொற்பிரயோகங்களுடன் நேர்த்தியான பக்கவடிவமைப்புடனும் வெளியாகியுள்ள இந்நூலில் இர. சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், டி. வி. மாரிமுத்து, எம். சின்னத்தம்பி ஆகியோர் கல்வித்துறைசார் ஆளுமைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொழிற்சங்கம்/ அரசியல் துறைசார் ஆளுமைகளாக வி. கே. வெள்ளையன், பெ. சந்திரசேகரன், ஓ. ஏ. இராமையா, எம்.ராமலிங்கம் ஆகியோரும் சி. நவரட்ன, பி.முருகேசு ஆகியோர் நிர்வாகத்துறைசார் ஆளுமைகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

சி. வி. வேலுப்பிள்ளை, சாரல் நாடன், தமிழோவியன், மல்லிகை சி. குமார் ஆகியோர் இலக்கிய துறைசார் ஆளுமைகளாகவும் எஸ். எம். கார்மேகம், ந. நெடுஞ்செழியன், பொன்.கிருஸ்ணசாமி ஆகியோர் ஊடகத்துறைசார் ஆளுமைகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட ஆளுமைகள் மறைவின் பின்னர் இந்த நூலாசிரியர் பத்திரிகைகளில் எழுதி வெளிவந்த கட்டுரைகளே இங்கு பிரசுரமாகியுள்ளன.

81 பக்கங்களைக் கொண்டு சிறிய நூல் வடிவில் அமைந்திருந்தாலும் கனதியான ஆக்கங்களை கொண்டுள்ளது.

எம். வாமதேவனின் முதல் மூன்று நூல்களும் மலையக சமூக வாழ்வியலோடு தொடர்புடையவை, அதே நேரம் எம். வாமதேவன் அவர்களது தனிப்பட்ட வாழ்வுடனும் கூட தொடர்புடையவை. நான்காவது நூலாக வெளிவரும் இந்த நூலும் அதே பாங்கில் அமைவது சிறப்பு.

**ஆசிரியர்:**
**எம். வாமதேவன்**
**தொடர்புகளுக்கு :077-7706103**





# அவள் எனக்கு மட்டுமா....

வவுனியூர் இரா உதயணன்

திலகரின் கண்கள் மகள் சோபிதாவையே பார்த்துக்கொண்டிருந்தன. அழுதழுது கண்கள் சிவந்து விட்ட நிலையில் மூக்கை உறுஞ்சிய வண்ணம் சோபிதா எழுந்து தனது அறைக்குள் சென்றாள். சோபிதாவின் நான்கு வயது மகன் அம்மா...அம்மா.. என்று அழுதபடியே அவளைப் பின்தொடர்ந்தான்.

திலகருக்கு கோபம் பொத்துகொண்டு வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை.

“இவளாகத் தேடிக் கொண்டது” தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்.

மனைவி திரவியம் முழு நாளும் சாப்பிடவில்லை என்று கோப்பிபோட்டுக் கொண்டு வந்து நீட்டினாள். “இப்ப இருக்கிற நிலைக்கு இதுதான் தேவை” என்று திரவியத்தின் மேல் எரிந்து விழுந்தார் திலகர்.

“உன்ர மகளுக்கு எத்தனை தடவை சொன்னனான். காதல் காதல் காதல் எண்டு போய் விழாதை, உனக்கு நல்ல ஒருவனாக பாத்து கட்டி வைக்கிறன் எண்டு, இப்ப என்ன நடந்தது பாத்தியே”

திரவியத்தின் கண்களும் கலங்கிவிட்டன. சோபிதா ரகுவரனைக் காதலித்த போது சோபிதாவின் தங்கை வனிதாவுடன் சேர்ந்து திலகருக்கு எதிராக போர்க் கொடி தூக்கியவள்தான் அவரது மனைவி திரவியம்.

அவளும் பாவம்தான். இப்ப கூனிக்குறுகி வார்த்தைகள் வெளிவராமல் கோப்பியை கையிலேந்திய வண்ணம் ஒரு குற்றவாளியாக திலகரின் முன் நிற்கிறாள்.

“இங்கேயிருந்து போ. அவளின்ர வாழ்க்கை நாசமாகப் போறதுக்கு நீதான் முக்கிய காரணம்” திலகர் பெரிதாக கத்தினார்.

“நான் அந்த நேரம் சொன்னதைக் கேட்டிருந்தால் இப்படியொருநிலை அவளுக்கு வந்திருக்குமே. நீங்க மூன்று பேரும் எனக்கு எதிராக நின்றியள். அதுன்ர விளைவுதான் இது.”

வனிதா அறையைவிட்டு வெளியே வந்து எட்டிப்பார்க்க அவளைப் பார்த்து கத்தினார் திலகர்.

அவள் அறைக்குள் ஓடி விட்டார்.

திலகர் கொழும்பில் நல்ல வேலையில் இருந்தவர். அதுவும் சுங்கவரித் திணைக்களத்தில் பெரிய பதவி வகித்தவர். இரண்டு வருடங்களுக்கு முன்புதான் மனைவி திரவியத்துடன் லண்டனுக்கு வந்தவர்.

வனிதா சென்ற வருடம்தான் திருமணம் முடித்தவள். சோபிதாதான் போன்பண்ணி வனிதாவை ரெண்டு நாட்களுக்கு தன்னோடு வந்துநிற்கச் சொல்லி கேட்டதற்கிணங்க கணவன் நரேனுக்கு சொல்லிவிட்டு சோபிதாவின் வீட்டில் வந்து நிற்கிறாள்.

ஒரு பக்கம் திலகரின் கத்தலும் மறுபக்கம் சோபிதா திரவியம் வனிதா ஆகியோரின் அழுகையும் அந்த வீட்டை ஒரு மரணவீடு போன்று காட்சியளிக்கச் செய்தது.

சிறிது நேரம் கழித்து திலகரின் நண்பன் சத்தியன் திலகரைத் தேடி வீட்டிற்கு வந்தார்.

இருவரும் முப்பது வருட நண்பர்கள். ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொண்டவர்கள். சத்தியன் சென்ற வருடம்தான் மகளின் வேண்டுகோளிற்கு இணங்க லண்டன் வந்து மகளோடும் மருமகனோடும் வாழ்த்து வருகிறார். சுத்தியனின் மனைவி இறந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

திலகரின் அருகில் இருந்த சத்தியன் வலது கையைப் பிடித்தார். திலகரின் கையிலேற்பட்ட நடுக்கத்தை சத்தியன் உணராமலில்லை.

‘சத்தியா எங்கட நாட்டிலதான் எங்கட சனத்திற்கிடையில கலாச்சார பண்பாட்டுச் சீரழிவு என்றால் இங்க அதைவிட மோசமாக இருக்கு’.

இங்க கையில நிறையப் பணமும் வசதியும் வந்தால் எதையும் செய்துவிடலாம் என்ற நினைப்பு ஒரு சிலருக்கு.

ஊரில பணமில்லாததால சீரழிவு ஏற்படுகுது. இங்க பணமும் வசதியும் கூடுதலாக இருக்கிறதால எங்கட சனங்கள் சீரழியுது.

சத்தியன் ஒன்றும் சொல்லாமல் திலகரின் கையைப் பிடித்தபடியே அமர்ந்திருந்தார்.

“அந்த அறுவானை என்ர மருமகன் எண்டுசொல்லக்கூட வெட்கமாக இருக்கு. இவனுக்கு இப்படியெல்லாம் கேவலம் கெட்ட நினைப்பு வரும் எண்டு யாருக்குத் தெரியும்”

“எங்க ரகுவரன்?” சத்தியன் கேட்க

சில கணங்கள் சத்தியனையே கண்வெட்டாமல் பார்த்தார் திலகர். அவரது கண்கள் கலங்கியதை சத்தியன் அவதானிக்கத் தவறவில்லை.

“அவனை இந்த வீட்டுப்பக்கம் வரவேண்டாமென்று சொல்லிப் போட்டன்”

“அவனுக்கு இந்த வீட்டில உரிமையிருக்குத்தானே” சத்தியன் இழுத்தார்.

“அந்த அறுவானுக்கு நல்ல பாடம் படிப்பிக்கப் போறன். அவனுக்கு சோபிதாவிலேயே உரிமை இல்லாமல் ஆக்கப்போறன். பிறகு வீட்டில என்ன உரிமை”

“என்ன சொல்லவாறாய் திலகர்” சத்தியன் வரண்டுவிட்ட குரலுக்கு உமிழ்நீரைப் பாச்சிய வண்ணம் கேட்டார்.

“சோபிதா இனி இப்படிக்கேடுகெட்ட போக்குக் கொண்டவனோடசேர்ந்து வாழமாட்டாளாம். விவாகரத்துத்தான் வேணுமாம்.”

“நீ அதுக்கு என்ன பதில் அவளுக்கு சொன்னனி” சத்தியன் கேட்க.

“உன் விருப்பப்படியே செய் என்று சொல்லிப் போட்டன்.” தயக்கமின்றி சொன்னார் திலகர்.

“எதுக்கும் நன்றாக யோசிச்சு முடிவெடுக்கவேணும். அவசரப்படக்கூடாது” சத்தியன் சொல்ல திலகர் நிமிர்ந்து சத்தியனைப் பார்த்தார்.

நாங்கள் கொழும்பில வேலைசெய்த காலத்தில் கார் திறப்பு மாத்திர கதை நீயும் கேள்விப்பட்டிருப்பாய் தானே.

“நீ என்ன கொழும்பில அந்தக் காலத்தில நடந்த சீரழிவுகளை பற்றி சொல்ல வாறியே” “என்ன இப்ப தீருமே”

“இல்லையடா. இந்த வசதி கூடின பணக்காரர் ஒரு சிலர் செய்த வேலைகளைத்தான் சொல்லுறன்”

“கார் திறப்புகளை ஒன்றாப்போட்டு குலுக்கிப் போட்டு ஒவ்வொருவனும் தான் எடுத்த கார் திறப்புக்கு சொந்தமானவனின்ர மனிசியை ஒரு இரவைக்கு கொண்டுபோற விசயத்தை பற்றித்தான் சொல்லுறன்.”

“அதுதான் பலருக்கும் அந்தக்காலத்தில தெரிந்த விசயமாச்சே”

“அவளவயளும் ஒத்துத்தானே போயிருக்கிறாளவையள்”

“அதெல்லாம் ஒரு தகுதிக்கு மேல நடக்கிற விசயம்” சத்தியன் சொன்னார்.

“இல்ல ஏன் அதைப்பற்றி கதைக்கிறாய்” மீண்டும் சத்தியன் கேட்க.

“ஏன் இதை உதாரணமாக சொல்ல வாறன் எண்டு உனக்கு விளங்கேல்லையே? திலகர் குரலை அடக்கி சத்தியனுக்கு சொன்னார்.

“விளங்குது...விளங்குது” என்ர மருமகன் என்ற அறுவான் இப்படித்தானே செய்ய யோசித்திருக்கிறான்.

“சொந்த மனிசியிட்ட வந்து அதுவும் ஒரு பிள்ளை இருக்கத்தக்கதாக தன்ர சினேகிதனோட போய்ப்படு அவனின்ர மனிசியோட நான் ஒரு நாளைக்கு இருக்கிறன் எண்டு ஒரு கூச்சம் வெட்கம் இல்லாமல் கேட்டிருக்கிறானே, இவனையெல்லாம் வெட்டிப் போட வேணும். அதுவும் விரும்பிக் கலியாணம் செய்துபோட்டு இப்படிக் கேட்டிருக்கிறானே.”

“அப்படி அவன் கேட்டது மிகமிகப் பெரிய தப்புதான் திலகர். ஒருவன் தன் பலவீனங்கள் தன்னைக் கட்டுப்படுத்தாதபடி பார்த்துக்கொள்ள வேணும். அவன் பலவீனமானவன்தான். பாத்தியே வெளிநாட்டில வசதிகளும் பணமும் கூடக்கூட புலன்களும் வேற பாதையில போகப்பாக்குது.”

திலகர் தலையைத் தலையை ஆட்டினார்.

இப்படிப்பட்டவங்களை திருத்த இயலாது சத்தியா. திரும்ப திரும்ப இதைப்பற்றித்தான் யோசிப்பாங்கள். அதோட மனைவிக்கு நேர்மையான உண்மையானவர்களாக இருக்கவே மாட்டாங்கள்.”

“நீ சொல்லுறது சரிதான். எல்லாமே மாறிக் கொண்டு போகுது. நீ சோபிதா வனிதா திரவியம் எல்லாரும் அவசரப்படாமல் கதைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வாங்கோ. அவ்வளவுதான் எனக்கு சொல்ல முடியும்.” சத்தியன் சொல்லிவிட்டு எழும்பி வாசற்படிகளை நோக்கி நடந்தார்.

# 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூல் வெளியீடு





சிரேஸ்ட ஊடகவியலாளர் பி. மாணிக்கவாசகம் எழுதிய மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் நூல் சர்வதேச மாற்று திறனாளிகள் தினமான நேற்று முன்தினம் (டிசம்பர் 03) மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் சமூக, வாழ்வியல் கட்டுரைகள் அடங்கிய இந்நூல் வெளியீட்டு நிகழ்வானது, மாந்தை மேற்கு வீகேன் நிறுவனத்தின் மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வெற்றிச்செல்வி சந்திரகலாவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் அ. சகிலா பானு கலந்து கொண்டிருந்தார். நூல் வெளியீட்டு நிகழ்வினை கவிஞர் மன்னார் பெனில் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் கலாநிதி நா. செந்தூர்ச்செல்வனின் வரவேற்பு நடனம் இடம்பெற்றிருந்தது.

தொடர்ந்து பிரதம விருந்தினர் மற்றும் திருமதி. நாகேஸ்வரி மாணிக்கவாசகம் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுடன் இணைந்து நூலை வெளியிட்டு வைக்க, “எங்கட புத்தகங்கள்” அமைப்பின் நிறுவனர் குலசிங்கம் வசிகரன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

நூல் மதிப்புரையை நானாட்டான் பிரதேச செயலாளர் மா. சிறிஸ்கந்த குமார் நிகழ்த்தியிருந்தார். மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டெ. க. அரவிந்தராஜ், வரவேற்பு நடனத்தை நிகழ்த்திய கலாநிதி. நா. செந்தூர் செல்வனுக்கு நினைவுப் பரிசினை வழங்கி வைத்து, நூல் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார்.

நிகழ்வில் இன்னிசை வழங்கிய பூவன் இசைக்குழுவினருக்கான நினைவுப் பரிசினை மாற்றுத்திறனாளிகள் இணைந்து வழங்கி வைத்தனர். நூலாசியரும், ஊடகவியலாளருமான பி. மாணிக்கவாச த்தின் சேவையினை பாராட்டி மாந்தை மாற்றுத்திறனாளிகள் அமைப்பு “காலத்தின் குரல்” என்ற விருதினை வழங்கி கௌரவித்தனர்.



நூலாசியர் பி. மாணிக்கவாசகத்தின் சார்பாக அவரது பாரியார் விருதினை பெற்றுக் கொண்டிருந் தார். அத்துடன் பிரதம விருந்தினர் மற்றும் வீகேன் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரினால், பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டிருந்தார்.

நூலாசிரியர் பி. மாணிக்கவாசகம் இணையவழியாக ஏற்புரையை நிகழ்த்தினார். நிகழ்வில் இயலாமையுடைய மக்களுக்கான தேசியசபை அங்கத்தவர் வெ.சுப்பிரமணியம், மன்னார் எச். என். பி. வங்கி முகாமையாளர் வடிவழகன், தமிழ்மணி கலாபூசணம் மேழிக்குமரன், உயிரிழை அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர், வவுனியா தேசிய கல்வியல் கல்லூரி ஓய்வுநிலை உபபீடாதிபதி ந. பார்த்தீபன் இவர்களுடன் தேசிகன் மற்றும் உயிரிழை அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர், மாற்றுத் திறனாளிகள் பொதுமக்கள் என பலரும் சுகாதார முறைப்படி கலந்து கொண்டிருந்தனர்.





# வெள்ளையனின் 50 ஆவது நினைவு தினம்

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் அமரர். வி. கே. வெள்ளையனின் 50 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அட்டன் ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்திலும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் அட்டன் தலைமை பணிமனையிலும் விசேட நினைவு தின பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து அமரர் வி. கே. வெள்ளையனின் நினைவுத்தூபி அமைந்துள்ள டிக்கோயா தோட்டத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# 'யாழ்ப்பாணத் தமிழ் அகராதி'க்கு அரசின் சாகித்திய மண்டல பரிசு

நடராஜா சிறிரஞ்சனின் “யாழ்ப்பாணத் தமிழ் அகராதி” புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்புப் பிரிவில் 2020 ஆம் ஆண்டின் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைத் தனதாக்கியுள்ளது. இரு தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் இவருக்கான விருது வழங்கப்பட்டது.



இவ்விருது குறித்து கருத்துத் தெரிவித்த சிறிரஞ்சன், “எமது பிரதேச வழக்குச் சொற்களைத் தொகுத்து அகராதியாக வெளியிட வேண்டும் என்ற எனது அவாவை வெளிப்படுத்திய வேளை, உரிய ஊக்கத்தை ஏற்படுத்தியவர்கள் இருவர். அதில் ஒருவர் த.மயூரநாதன். இவர் பின்னர் அவ்வகாரதியின் உதவி ஆசிரியராகச் செயற்பட்டார். மற்றவர் க.குமரன். இவர் இவ்வகாராதியின் வெளியீட்டாளர். இவ்வகராதியின் மற்றைய உதவியாசிரியர் பெரும் புலமைமிக்க சான்றோன் அமரர் ஆ. சபாரட்ணம். அகராதி நூலுருப்பெற எனது எண்ணத்தை வடிவமைத்துத் தந்தவர் கு. பிரதீபன். அகராதியில் உள்ள விளக் கப் படங்களை வரைந்தவர்கள் ஜெகன் செம்பலிங்கம் மற்றும் அபிராம் குணராஜா. இவர்கள் ஒவ்வொருக்கும் இந்த விருதில் பங்கு உண்டு” எனத் தெரிவித்தார்.



# கருவிக்கு சுவாபிமானி 2020 தேசிய விருது

அங்கவீனமுற்ற நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிறுவனங்களைத் தரப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் சமூக சேவை திணைக்களத்தினால் கருவி நிறுவனம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கடந்த வாரம் பத்தரமுல்ல பலவத்தை அபே கம வாளாகத்தில் நடைபெற்ற சுவாபிமானி 2020 விருது விழாவில் கருவி நிறுவனத்தின் சார்பில் செயலாளர் து. ஜெசிந்தன் மற்றும் பொருளாளர் கொன் கிளேடியஸ் ஆகியோர் அதனைப் பெற்றுக் கொண்டனர்.



# புலமைச் சிகரம்



## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

30) நாளொன்றில் ரூபாய் 10.00 வீதம் மிதுலேஷ் உண்டியலில் இட்டு வந்தான். 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மட்டும் அவன் சேமித்த மொத்தப்பணம் எவ்வளவு?

1) ரூபாய் 280.00 2) ரூபாய் 290.00 3) ரூபாய் 270.00

31)  

குறைவு ⟶ அதிகம்
அதிகம் ⟵ குறைவு

மேலே தரப்பட்ட தரவுக்கேற்ப பழங்களை இறங்குவரிசைப்படுத்தும் போது சரி நடுவில் வரும் பழம் எது?

1)  2)  3) 

32) மூன்று நாட்கள் நடைபெறும் கண்காட்சியொன்றை பார்வையிட முதல் நாளை விட அடுத்த நாள் இருமடங்கான மாணவர்கள் வருகை தருவர். மூன்று நாட்களும் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை 700 எனின் முதல்நாள் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1) 200 2) 150 3) 100

33) பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

- அது உயிருள்ள ஒரு பொருள்.
- அது மனிதனுக்குப் பயன்படும்.
- அது உண்ணக்கூடிய ஒரு பொருள்.
- அது பறவையிலிருந்து பெறக்கூடியது.

1) குஞ்சு 2) முட்டை 3) இறைச்சி

❖ **வகுப்பொன்றில் மாணவர்கள் A, B, C எனும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**


- குழு C இல் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையின் இருமடங்கு மாணவர்கள் குழு B இல் உள்ளனர்.
- B, C ஆகிய குழுக்களில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை குழு A யிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.
- குழு B இலிருந்து ஒரு மாணவன் குழு C இற்குச் செல்லும்போது குழு B இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

34) மேலுள்ள தகவலின்படி மூன்று குழுக்களிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 36 2) 18 3) 30

35) பின்வரும் கூற்றுக்களில் சரியான கருத்தைத்தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க?

1) புகைவண்டியில் அதிகமானோர் பயணம் செய்யலாம். அது மின்சாரத்தினாலும் இயங்கும்.
2) கப்பல் கடலில் செல்லும். அதில் இரும்பினால் ஆன பொருட்களை ஏற்றமுடியாது.
3) பூனை அனைத்துமுண்ணி. அதற்கு மரத்தில் ஏறத்தெரியாது.


36) 

இவ்வுருவானது ஒரேயளவான கம்பிகளினால் செய்யப்பட்ட உருவாகும். இவ்வுருவில் நடுவிலுள்ள ▽ இப்பகுதியைச் செய்வதற்கு 12m நீளமான கம்பி பயன்பட்டது. எனின் முழு உருவைச் செய்வதற்குத் தேவைப்படும் கம்பியின் மொத்த நீளம் யாது?

1) 36m 2) 20m 3) 48m

37) பெட்டியொன்றில் சில பந்துகள் இருந்தன. அவற்றை மூன்று மூன்றாக எண்ணிய போது 2 பந்துகள் எஞ்சியிருந்தன. அவற்றை எட்டு எட்டாக எண்ணிய போது 4 பந்துகள் எஞ்சியிருந்தன. எனின் பெட்டியில் இருந்த பந்துகள் எத்தனை?


1) 356 2) 288 3) 354

38) 

இவ்வுருவில் இனங்காண முடியாத தளவடிவம் எது?

1) சதுரம் 2) வட்டம் 3) முக்கோணம்

39) கீழ்வரும் படங்களில் பலவின் பாலினைக் குறிக்கும் படத்தினைத் தெரிவு செய்க?

1)  2)  3) 

40) A யின் சகோதரி B ஆவாள். C என்பவர் B இன் தாயாவார். இதன்படி A என்பவர் C இன்

1) தாய் 2) சகோதரி 3) மகன்

## விடைகள்

| | | |
|---|---|---|
| 30) 02 | 34) 01 | 38) 03 |
| 31) 02 | 35) 01 | 39) 01 |
| 32) 03 | 36) 01 | 40) 03 |
| 33) 02 | 37) 01 | |

# கண்ணாடிக் கூட்டிலிருந்து கல்லெறியாதே!

## பொன்சேகாவுக்கு வீரசேகர பதிலடி



கொழும்பு, டிசெ. 05

கண்ணாடிக் கூட்டிலிருந்து கல்லெறிய முற்பட வேண்டாம் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சரத் பொன்சேகாவின் குணம் பற்றி அனைவருக்கும் தெரியும். அதனால்தான் நல்லாட்சியின்போது அவருக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி கூட வழங்கப்படவில்லை. ஆனால், இன்று பாதுகாப்பு அமைச்சு பதவி பற்றி கனவு கண்டுகொண்டிருக்கின்றார்.

போர் முடிவடைந்த பிறகு தேவையற்ற விதத்தில் ஆயுதக் கப்பலொன்றைக் கொண்டு வந்தார். அதனை அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திருப்பி அனுப்பியதாலேயே அவருடன் பொன்சேகா முரண்பட்டார். எனவே, கண்ணாடிக் கூட்டிலிருந்து கல்லெறிய வேண்டாம் என வலியுறுத்துகின்றேன்" - என்றார். (இ)

# மலையகத் தமிழர்களுக்கு ஓரவஞ்சனை!

## ஐ.நா. அறிக்கையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 05

"மலையகத் தமிழ் மக்கள் ஏற்றத்தாழ்வான விதத்தில் பாதிக்கப்பட்டிருப்பதை நான் நேரடியாகப் பார்த்தேன்" என்று சமகால அடிமைத்துவ வடிவங்கள் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் டெமோயா ஒபோகாட்டா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. அறிக்கையாளர் அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் இதர தரப்பினர்களைச் சந்தித்து பேச்சு நடத்தினார். அத்துடன், கண்காணிப்பு பயணங்களையும் மேற்கொண்டிருந்தார். பெருந்தோட்ட பகுதிக்கும் அவர் சென்றிருந்தார்.

தனது பயணத்தின் முடிவில் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன்போது, "ஓரம் கட்டப்படுதல், பாரபட்சம், சுரண்டல் இயல்பிலான வேலை நிலைமைகள் மற்றும் மிக மோசமான வாழ்க்கை நிலைமைகள் என்பவற்றினால் மலையகத் தமிழர்கள் ஏற்றத் தாழ்வான விதத்தில் பாதிக்கப்பட்டிருப்பதை நான் நேரடியாகப் பார்த்தேன்" - என்று அவர் குறிப்பிட்டார்.



இலங்கைப் பயணம் தொடர்பில் குறித்த அறிக்கையாளர் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார். அந்த அறிக்கை செப்டெம்பர் மாதம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். (இ)

# முடிந்தால் சு.கவின் 14 பேரை வெளியேற்றிக் காட்டுங்கள்!

## "மொட்டு" கட்சிக்கு தயாசிறி சவால்



கொழும்பு, டிசெ. 05

**"முடிந்தால் அரசிலிருந்து எங்கள் 14 பேரையும் வெளியேற்றிக்காட்டுங்கள். அவ்வாறு நடந்தால் அது அரசுக்கே ஆப்பாக மாறும்."**

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"மொட்டு கட்சியிலுள்ள சிலரே எம்மைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். முடிந்தால் எங்களை வெளியேற்றிக்காட்டுங்கள் என அவர்களுக்கு நாம் சவால் விடுக்கின்றோம். அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதை பாருங்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவர்களுக்கு இன்றும் அக்கட்சி மீது பற்று உள்ளது. எனவே, தொடர் விமர்சனங்களை சகித்துக்கொள்ளமாட்டார்கள். நாம் 14 பேர் மட்டும் வெளியேறமாட்டோம். மஹிந்த அமரவீர கூறியது போல் நடக்கலாம்" - என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அரசிலிருந்து வெளியேறுவதாக இருந்தால் 50, 60 பேருடனேயே வெளியேறுவோம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டிருந்தார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (இ)

# கடலில் நீராடச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி பரிதாப மரணம்

மட்டக்களப்பு, டிசெ. 05

வாழைச்சேனைப் பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவடிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 11 மற்றும் 14 வயதுடைய இருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

நீரில் மூழ்கிய இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)


VACANCY

Pharmasity, Software Engineer, Chef, Marketing Executives, Web Admin, Graphics Designer, Accounts Assistant

contact number: **074 138 3368**







# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 05

மங்களகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெவியாமடுவ பிரதேசத்தில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்படுள்ளனர்.

கோஹொம்பகஸ்தலாவ பிரதேசத்தைச்சேர்ந்த 55 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மங்களகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது

நுவரெலியா, டிசெ. 05

நுவரெலியா, ஹட்டன் நோர்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலவலதெனிய பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## பாகிஸ்தான் கொலைச் சம்பவம்

# முழுமையான விசாரணை நடத்த ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, டிசெ. 05

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தமது கட்சி இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதையும் பாகிஸ்தானில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# பாகிஸ்தானில் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## ஆளும் கட்சியும் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 05

பாகிஸ்தானில் பணியாற்றும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, சபையில் நேற்று கோரிக்கை விடுத்தார்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு என்பன இணைந்து இதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், அடிப்படைவாதிகளால் இலங்கையர் ஒருவர் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டுள்ள சம்பவத்தையும் அவர் கண்டித்தார். (அ)

## தடைப்பட்டுள்ள...

உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு, காலி போன்ற நகரங்களை போல யாழ்ப்பாண நகரத்தையும் அபிவிருத்தி செய்யும் முகமாக பல் வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பல மில்லியன் ரூபா செலவில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக தூர இடங்களுக்கான பஸ் தரிப்பு நிலையம், யாழ்ப்பாண மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதி உட்பட மேலும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் தற்போது அவ்வாறான திட்டங்கள் தொடர்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் இந்த அரசினால் நிறுத்தப்பட்டுள்ளன. ஏன் அவ்வாறு செய்கின்றார்களென தெரியவில்லை. அரசியல் பழிவாங்கலுக்காகவே இவ்வாறு செய்கின்றார்கள் என நினைக்கின்றேன்.

ராஜபக்ஷக்கள் தமது பெயர் குறிப்பிடப்படும் அபிவிருத்தி திட்டங்களை மாத்திரமே செயற்படுத்துவார்கள், மக்கள் நலன் சார்ந்து செய்யப்படமாட்டார்கள் என்பதே உண்மை.

நான் யாழ்ப்பாணத்திலிருந்து இந்த அரசாங்கத்துக்கு ஒரு கோரிக்கையை முன் வைக்கின்றேன். தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கி மக்கள் சார்ந்த திட்டங்களை முன்னெடுங்கள்-என்றார். (அ)

## இலங்கையில்...

கணிசமான மற்றும் நீடித்த அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இலங்கையில் அதன் முயற்சிகளில் மீண்டும் கவனம் செலுத்துமாறு அவர்கள் அன்ரனி பிளிங்கனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஏறக்குறைய 30 ஆண்டுகாலம் நிறைவடைந்துள்ள நிலையில் பிரிக்கப்படாத இலங்கையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களுக்கான அவசியம் குறித்தும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆகவே அத்தகைய தீர்வுகளைக் காண தமிழ் மற்றும் முஸ்லிம்கள் உட்பட எதிர்க் கட்சிகளுடன் இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாட்டை வலியுறுத்துமாறும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை அவர்கள் கேட்டுள்ளனர்.

இலங்கை மக்களின் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்லும் அதே வேளையில், இந்த முயற்சியை ஆதரிக்கவும் அதற்கான வசதியை ஏற்படுத்தி கொடுக்கவும் அமெரிக்கா தயாராக உள்ளது என்பதை திணைக்களம் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இறுதியில், எடுக்கப்படும் எந்தவொரு முடிவும் தமிழ் , முஸ்லிம் மக்கள் உட்பட இலங்கை பிரஜைகள் அனைவரினதும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டிய அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

## அமெரிக்கா,...

அமெரிக்காவையும், இந்தியாவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடுவதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை."

- இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந்தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு மக்கள் ஆணையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இருக்கின்றார் பிரதமர் இருக்கின்றார். அதுமட்டுமன்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான அரசு உள்ளது. இந்த மூன்று தரப்பினரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உறுதியாக உள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் நினைத்த மாதிரிச் செயற்படுகின்றனர்.

அவர்கள் வெளியகத் தீர்வை விரும்புகின்றனர். அதனால்தான் அவர்கள் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஓடித் திரிகின்றனர்.

உள்நாட்டுப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வே அவசியம். அதைவிடுத்து வெளியகத் தீர்வைப் பெற முயற்சிப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும்" - என்றார். (இ)

## ஜனாதிபதித்...

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிகளின் பொதுவேட்பாளராக சம்பிக்க ரணவக்கவைக் களமிறக்கத் தெற்கில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அதற்கான முன்னாயத்த வியூகங்களில் எதிரணிகள் களமிறங்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள - பௌத்த மக்கள் மத்தியிலும், பௌத்த தேரர்கள் மத்தியிலும் சம்பிக்கவுக்குத் தனியான இடம் இருப்பதால் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக அவரைக் களமிறக்க எதிரணிகள் தீர்மானித்துள்ளன எனவும் கூறப்படுகின்றது.

இற்குச் சம்மதம் தெரிவித்துள்ள சம்பிக்க, கள நிலைமைகளை நேரில் ஆராய நாடு முழுவதற்கான பயணங்களைத் தற்போது ஆரம்பித்துள்ளார்.

அவரது 47 ஆவது படையணியின் பெயரிலேயே அவர் களமிறக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

அதன் ஓர் கட்டமாகவே அவர் வடக்குக்கு விஜயம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அவர் யாழ்.நகரில் விநியோகித்த துண்டுப்பிரசுரங்களில் இந்த அரசையும் ஜனாதிபதியையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற சாரப்பட கருத்துக்கள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-இ)

## கூட்டமைப்பை...

இந்தியப் பிரத மர் நரேந்திர மோடியுடன் சந்திப் பொன்றை ஏற்படுத்தித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த சில கால மாகக் கோரிக்கை விடுத்து வந்தது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஓரிரு தினங்களில் இரா.சம்பந்தன் தலைமையிலான தூதுக் குழுவொன்று இந்தியாவுக்குச் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரா சம்பந்தனுடன் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் மற்றும் எம். ஏ.சுமந்திரன் ஆகியோர் டில்லி செல்வார்கள்.

அரசியல் தீர்வு திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவே கூட்டமைப்பு டில்லி செல்கின்றது.

கூட்டமைப்பின் பயணத்தின் பின்னர் ஏனைய சில தமிழ்க் கட்சிகளையும் டில்லிக்கு அழைப்பதற்கு அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி தமிழ் முற்போக்கு கூட்டணியும் விரைவில் இந்தியா பயணிக்கலாம் என அறியமுடிகின்றது. (அ)

## மீண்டும் முடக்கம்...

கால முடக்கமொன்றை அமுல்படுத்த அரசு ஆராய்ந்து வருகிறது.

இதன்படி டிசெம்பர் 23 ஆம் திகதி முதல் ஜனவரி முதல் வாரம் வரை நாட்டை சுகாதார கட்டுப்பாடுகளுடன் முடக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒமைக்ரொன் வைரஸ் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் , சுகாதார கட்டுப்பாடுகளை கடுமையாக்க அரசு தீர்மானித்துள்ளது. (அ)

# தமிழ் மக்களை இனியும் மடையர்களாக்க முயலாதீர்

## கூட்டமைப்பின் தலைவர்களிடம் அமைச்சர் பிரசன்ன வலியுறுத்து

கொழும்பு, டிச. 05

"இந்தியா இருக்கின்றது எமக்குத் தீர்வைத் தரும் என்று தமிழ் மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றி வருகின்றது. அதன் வெளிப்பாடாகத் தான் மீண்டும் புதுடில்லிக்குச் செல்ல கூட்டமைப்பின் தலைவர்கள் முயல்கின்றனர். தமிழ் மக்களை இனியும் மடையர்களாக்க முயல வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்."

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் இந்தியா செல்லவுள்ளது என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் மீண்டும் கொரோனாவின் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொரோனாவுக்கு மத்தியிலும் தமது ஏமாற்று அரசியலை நடத்துகின்றனர்.

எந்த நாட்டுக்குச் சென்றாலும் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசுதான் தீர்வை வழங்கும்.

எந்த நாட்டின் அழுத்தங்களுக்கும் இலங்கை அடிபணியாது" - என்றார். (இ)

# முன்னாள் அரசியல் கைதியிடம் ரி.ஐ.டியினர் நேற்று விசாரணை

வவுனியா, டிசெ. 05

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மூன்றரை மணி நேரம் நேற்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் அரவிந்தனை (ஆனந்தவர்மன்) கடந்த முதலாம் திகதி கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் பெற வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர் அன்று தன்னால் வரமுடியாதுள்ளது எனத் தெரிவித்து நேற்று வாக்குமூலம் வழங்குவதற்காகச் சென்றிருந்தார்.

அதனடிப்படையில் இல 149, பூட்டானி கெப்பிட்டல் கட்டிடம், கிருலப்பனை வீதி, பொல்லேன்கொட, நாரம்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவின் 3 ஆம் மாடியில் விசாரணைகள் இடம்பெற்றன. இதன்போது சுமார் மூன்றரை மணிநேரம் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என்று அவர் தெரிவித்துள்ளார்.

# 16 வருடங்களின் பின் கைதாகின சந்தேகநபர்

யாழ்ப்பாணம், டிசெ. 05

16 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொள்ளைச் சம் பவத்தில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று சனிக்கிழமை நெல்லியடி பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு கரணவாய் மகாவித்தியாலயத்தில் காவல் கடமையில் இருந்த காவலாளியை கட்டி வைத்து விட்டு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அப்போது முறைப்பாடு செய்யப்பட்டு இருந்த நிலையில் 16 வருடங்கள் கடந்த நிலையில் நேற்று சனிக்கிழமை காலை வடமராட்சி வல்லைப் பகுதியில் வைத்து மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த கொள்ளையன் நெல்லியடி பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர மற்றும் ராஜகருணா, பிரேமரத்தின, விஜயபண்டாரா ஆகிய பொலிஸ் குழுவினரே 16 வருடங்கள் கடந்த நிலையில் இக் கொள்ளையனை கைது செய்துள்ளனர்.(அ-02)

## அரசுக்கு எதிராக...

பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிர தான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

எதிரணி எம்.பிக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை தமது கட்சி எம்.பிக்கள் சபை அமர்வில் பங்கேற்கமாட்டார்கள் என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அத்துடன், மனுஷ நாணயக்காரவை ஆளுங்கட்சி எம்.பிக்கள் சபை வளாகத்தில் வைத்து தாக்க முற்பட்ட சம்பவத்துக்கும் கடும் எதிர்ப்பையும் அவர் வெளியிட்டார்.

அதேவேளை, ஆளுங்கட்சி எம்.பிக்கள் சிலர் நேற்றுமுன்தினமும் சபைக்குள் வைத்து மனுஷ நாணயக்காரமீது தாக்குதல் நடத்த முற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனா தொற்றால் மேலும் 21 பேர் மரணம்

கொழும்பு, டிச. 05

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 440ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 21 மரணங்களில் 4 பெண்களும், 17 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# ஒளியை பாய்ச்சுவோம் இருளை அகற்றுவோம்

## "மின்சூளம்" சின்னம் தொடர்பில் முற்போக்குக் கூட்டணி கருத்து

கொழும்பு, டிசெ. 05

**"தமிழ் முற்போக்குக் கூட்டணியானது மின் சூளாக இனி ஒளியைப் பாய்ச்சும். உங்களைச் சூழ்ந்துள்ள இருளையும் அகற்றும். மூன்று கட்சிகளும் புரிந்துணர்வுடன் பயணத்தால் எதிர் காலமும் பிரகாசமாக இருக்கும்."**



- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் 300 மாணவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று ஹட்டன் ஹைலண்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"ஒமிக்ரோன் என்ற புதிய வைரஸ் பிறழ்வும் உருவாகியுள்ளது. இந்நிலையில் உலக நாடுகள் திண்டாடுகின்றன. இலங்கையிலும் பல பிரச்னைகள் தலைவிரித்தாடுகின்றன. குறிப்பாக பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன. இதனால் மக்களின் வாழ்க்கைச் சுமையும் அதிகரித்துள்ளது. கோதுமா மா விலை உயர்வானது, பெருந்தோட்ட மக்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, மக்களுக்கான நிவாரணத் திட்டங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோல 'காஸ்' பிரச்னையும் பெரும் பிரச்சினையாக உள்ளது. எந்நேரத்தில் எந்தப் பாகம் வெடித்துச் சிறதும் எனத் தெரியவில்லை. இந்நிலைமைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களே பொறுப்புக் கூறவேண்டும்.

விஞ்ஞானபூர்வமான நடைமுறைகளை அவர்கள் முறையாகப் பின்பற்றியிருந்தால் இந்நிலைமையைத் தவிர்த்திருக்கலாம். இது மனித உயிர்களுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே, உறுதியான தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

அதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 'டோர்ச்' (மின்சூளம்) சின்னம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்று 'பெட்டரிகளும்' இயங்கு நிலையில் இருந்தால்தான் மின்சூளத்தால் பிரகாசமாக ஒளியைப் பாய்ச்ச முடியும். அதேபோல் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளுக்குமிடையில் சிறந்த புரிந்துணர்வு உள்ளது. 6 வருடங்களாகக் கூட்டணியாகப் பயணிக்கின்றோம். இனி மின்சூளம் ஏந்தி வருவோம். மக்களைச் சூழ்ந்துள்ள இருளை அகற்றி, ஒளியைப் பாய்ச்சும் விதத்தில் எமது பயணம் தொடரும்" - என்றார். (இ)

## கொக்கிளாயில் எரிவாயு அடுப்பு வெடிப்பு



முல்லைத்தீவு, டிசெ. 05

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கொக்கிளாய் மேற்கு கிராமசேவர் பிரிவில், புளியமுனை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை மின் வெட்டு அமுலில் இருந்த நிலையில், வீட்டு வெளிச்சத்துக்காக மெழுகு வர்த்தி ஏற்றுவதற்காக எரிவாயு அடுப்பை இயக்கிய போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என வீட்டார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் வெடிப்புச் சம்பவத்தின்போது எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை. (இ)

# பாகிஸ்தானில் இலங்கையர் கொலை: முற்போக்குக் கூட்டணி கடும் கண்டனம்

கொழும்பு, டிசெ. 05

"பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, எரியூட்டி படுகொலை செய்யப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பாகிஸ்தானில் நேற்று துன்பகரமான சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இலங்கையர் ஒருவர் அடித்து - துன்புறுத்தப்பட்டு - எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இதற்காக இலங்கை அரசும் முழுமையாகப் போராட வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நூறு பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர், நீதி நிலைநாட்டப்படும் என பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது. அதேபோல் இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கான கோரிக்கையை நாம் இன்னும் விடுக்கவில்லை. அவ்வாறு விடுத்தால் நிச்சயம் சந்திப்புக்கான வாய்ப்பு கிடைக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா செல்லவுள்ளது. அவர்கள் முதலில் சென்று வரட்டும்" - என்றார். (இ)













இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-புன்னகை தேசம்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT - யாழ் மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : செல்லாடுகளம் -ஆரிய குளத்தை முன்மாதிரியாக கொள்ளலாமா?



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-சிவஸ்ரீ ராமச்சந்திர பாபு சர்மா-பிரதமரின்




**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

---

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு